சேமமடு பொத்தகசாலையின்

# சேமமடு நூலகம்

பொத்தக செய்தி மடல்

இதழ்- 006 மார்கழி (சிலை) 2011 ரூபா.30

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
சேமமடு பொத்தகசாலை
அன்புடன்
தொ.பே: 011 2472362
தொ.ந: 011 2448624
அன்பளிப்பு
U.G. 52, பீப்பல்ஸ் பார்க், கொழும்பு 11.








**நூற்றாண்டு விழா 1911-2011**
**ஓமந்தை மத்திய கல்லூரிச் சிறப்பிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ/ஓமந்தை மத்திய கல்லூரி

# நூற்றாண்டு விழா மலர்

## 1911 - 2011

இந்நூற்றாண்டு விழா மலர் பல்துறை ஆக்கங்களுடன்
430 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

**தொடர்புக்கு : அதிபர் மூ.அரசரத்தினம் -077 4907855**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

நூலகம்


# சேமமடு நூலகம்

புத்தக செய்தி மடல்

இதழ் : 006 மார்கழி 2011

**ஆசிரியர்**

தமிழாகரன்

**நிர்வாக ஆசிரியர்**

சதபூ.பத்மசீலன்

**அச்சு**

சேமமடு பதிப்பகம்

தொ.பே:011-2331475

கை.பே:0777 345666/ 0712726778

**தொடர்புகளுக்கு**

சேமமடு பொத்தகசாலை

சேமமடு பதிப்பகம்

பத்மம் பதிப்பகம்

யூ.ஜி.50பீப்பள்ஸ் பார்க்

கொழும்பு-11

இலங்கை

தொ.பே : 011-2472362, 2321905

தொ.நகல் : 011-2448624.

மின்னஞ்சல் : chemamadu@yahoo.com

puthma_Seelan@yahoo.com

puthmaseelan@chemamadu.com

இணையம் : www.chemamadu.com

www.cbc.com

ISSN : 20129025


## ஆசிரியரிடமிருந்து...

தமிழில் நூலகப்பண்பாட்டுச் செழுமைக்கும் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் அறிவுசார் உள்ளீடுகளை வழங்குவதில் சேமமடு பதிப்பகம் நிதானமாக இயங்கி வருகின்றது. கல்விசார் ஆக்க வெளியீடுகளில் சேமமடு தனித்துவமான அணுகுமுறைகளுடன் தொழிற்பட்டு வருகின்றது. தொடர்ந்து தமிழில் அறிவைத் திரட்டு வதற்கான முழுச்சாத்தியப்பாடுகளையும் வாசகர்களுக்கு திறந்து விடுவதற்கான பன்முக முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

சமூக வாழ்வியல் புலத்திலும் வாழ்வியல் மதிப்பீடுகளிலும் நூலகப் பயன்பாட்டின் தேவையை வலியுறுத்துகின்றது. இதற்கேற்ப புதிய அறத்தையும் புதிய பண்பாட்டையும் வளர்ப்பதற்கான முயற்சிகளில் எமது பதிப்பகப் பணிகளை ஒருங்கிணைத்து வருகின்றோம்.

இதுவரை சேமமடு பதிப்பகம் 120க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளோம். சிறுவர் ஆக்க இலக்கியத்தையும் மற்றும் அறிவியல் ஆக்கத்தையும் வளர்க்கும் நோக்கில் பத்மம் பதிப்பகம் உருவானது. இந்த இரண்டு நிறுவனங்களும் வெளியிட்ட நூல்கள் பற்றிய அறிமுகம் தரவுகள் ஆசிரியர்கள் பற்றிய குறிப்புகள் யாவற்றையும் இணைத்து முழுமையாகப் பார்வையிடுவதற்காக இணையத்தள வசதிகள் செய் கொள்ளப்பட்டுள்ளன. ஆம்! www.chemamadu.com மூலம் சேமமடு, பத்மம் வெளியீடுகளை வாசகர்கள் பார்வையிட முடியும்.

வாசகர்கள் ஒருதடவை இந்த இணையத் தளத்தைப் பார்த்தால் அறிவுசார்ந்த நூல்களின் பெருக்கத்தை மதிப்பிட்டுக்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி நம்மது வாசிப்புத் தேடலுக்கு ஏற்ப இந்நூல்களுடன் பரிட்சியத்தையும் ஏற்படுத்தலாம். சேமமடு நூலகம், ஆசிரியம் முதலான இதழ்கள் பதிவிறக்கம் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

puthmaseelan@chemamadu.com என்னும் புதிய மின்னஞ்சலும் உபயோகத்தில் உள்ளது. அத்துடன் மிக விரைவில் www.cbc.com என்னும் இணையத் தளத்தையும் ஆரம்பிக்க உள்ளோம். அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

எமது இத்தனை இணையத்தள வேலைகளுக்கு உறுதுணையாக, தற்போது சென்னையைத் தளமாகக் கொண்டு இயங்கும் இணைய வடிவமைப்பாளர் "விருபா" திரு.குமரேசன் இருந்து வருகின்றார். இந்த நேரத்தில் அவருக்கு எமது நன்றிகளைக் கூறிக்கொள்வதில் மகிழ்வடைகின்றோம்.

சேமமடு 2012இல் பல்துறை சார்ந்த நூல்களை வெளியிடுவதற்கான முயற்சிகளில் உள்ளது. வழமை போல் எமது நூலாக்கப் பணிகளுக்கு யாவரும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வாண்மையியல்

சமகாலத்தைய ஆசிரிய வாண்மை முன்னரிலும் கூடுதலான கவனயீர்ப்பை உலகம் முழுவதும் பெறத் தொடங்கியுள்ளது. அதாவது அறிவுப் பொருளாதாரத்தின் பின்புலத்தில் ஆசிரியர்களிடமிருந்து மிகையான எதிர்பார்ப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அறிவின் உற்பத்தியை ஆழமும் விரிவும்படுத்தல் அறிவின் கையளிப்பை விளைத்திறன்படுத்தல் என்ற செயற்பாடுகளில் ஆசிரியர்கள் முன்னரிலும் கூடுதலான விசையுடன் தொழிற்படுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மேலும் உள்ளூர் பண்பாட்டுக் கூறுகளுக்கும் சுதேசியத் தன்மைக்கும் முரணான அல்லது பொருந்தா மற்ற விசைகளும் இயங்குகின்றன. இந்நிலைமையின் அறிவுருபாக்கம் குறித்து மீள்நோக்குச் சிந்தனையும் பொருத்தமாக எழுச்சி பெற வேண்டியுள்ளது.

பகற்பொழுதின் கூடுதலான அளவு நேரம் ஆசிரியர் மாணவர் இடைவினைகளுடன் இணைந்துள்ளமையால் மாணவரின் நடத்தை விலகல்களுக்கும் அடைவு வீழ்ச்சிக்கும் ஆசிரியர்களே பொறுப்பாக்கப்படுகின்றனர். ஆகவே ஆசிரியரின் நடத்தைகள் தொடர்பான பல்வேறு விமரிசனங்கள் எமக்கு மேலெழும். சமூக வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும் ஆசிரியர்களுக்குப் புதிய வகிபங்குகளை வழங்கத் தொடங்கியுள்ளன. மாணவரின் அறிவு வளர்ச்சிக்கு மட்டுமன்றி ஆளுமை வளர்ச்சிக்கும் ஆசிரியரையே பொறுப்பாளிகளாக்கப்படுகின்றனர்.

மேற்கூறிய புதிய மாற்றங்களின் பின்புலத்திலே "ஆசிரிய வாண்மை" பற்றிய மீள்நோக்கும் பகுப்பாய்வுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவையனைத்தையும் கருத்திலே கொண்டு ஆசிரிய வாண்மை பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய நூலாக இந்த ஆக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரிய வாண்மையை விரித்து ஆழ்ந்த நோக்கிலே தரிசிப்பதற்கு இந்நூல் பயன்படும்.




**ஆசிரியர் வாண்மையியல்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சபா.ஜெயராசா |
| பக்கம் | : | 120 |
| விலை | : | 300.00 |
| வெளியீடு | : | சேமமடு |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமடு புதுவரவு

சி.தில்லைநாதன்

# தமிழியல்சார் சிந்தனைத் துளிகள் -2

தலைசிறந்த ஒரு மொழியியலாளராக நம்மத்தியில் விளங்கும் பேராசிரியர் சுசுசீந்திரராஜா கீழைத்தேயப் பண்பாட்டிலும் புலமையிலும் காலூன்றி நின்றவாறு மேலைத்தேய ஆய்வு நுட்பங்களையும் நன்கு உள்வாங்கியவர். தம் இளமைக்காலத்தில் இலங்கையின் உன்னதமான அறிஞர்கள் பலரிடமும், பின்னர் பட்டப்படிப்பின்போது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் மு.வரதராசன் முதலான அறிஞர்களிடமும் தமிழைத் துறைபோகக் கற்றவர். அதன்பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் மேற்பார்வையில் மொழியியல் ஆய்வு மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றவர். ஆங்கிலத்திலும் சிறந்த புலமை வாய்க்கப் பெற்றவர். சிங்களம், சமஸ்கிருதம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் நல்ல பரிச்சயம் உள்ளவர். இங்கிலாந்திலுள்ள எடின்பரோ பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆர்.ஈ.ஆஷர், அமெரிக்காவிலுள்ள கோர்னல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜேம்ஸ் டபிள்யு காயர், ரஷ்ய நாட்டைச் சேர்ந்த பிரபல திராவிட மொழியியல் அறிஞர் எம். அந்திரனோவ் ஆகியோரால் வியந்து பாராட்டப்பட்டவர். பேராசிரியர் ஜேம்ஸ் காயருடனும் தலைசிறந்த சிங்கள மொழியியலாளரான பேராசிரியர் டபிள்யு.எஸ்.கருணாதிலகவுடனும் சேர்ந்து இலங்கையின் பேச்சு மொழிகள் குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டவர்.




கொழும்புப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் ஆகியவற்றிலே கடமையாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையின் தலைவராக நெடுங்காலம் விளங்கியவர். பத்திரிகைத் துறையிலும் அனுபவம் உடையவர். தேசிய, சர்வதேச மட்டங்களில் துறைசார் நிபுணத்துவத்துக்காகவும் பங்களிப்புகளுக்காகவும் பாராட்டப்பெற்றவர். களனிப் பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு நடைபெற்ற அதன் ஐம்பதாவது பட்டமளிப்பு விழாவில் "இலக்கிய கலாநிதி" பட்டம் வழங்கி சுசியைக் கௌரவித்தமை தமிழ்பேசும் மக்கள் எல்லோருக்கும் பெருமை அளிப்பதாகும்.

இவ்வாறு பல சிறப்புகளுக்கு உரியவராய் இருந்த போதிலும், ஒருபோதும் தன்னை முன்னிலைப்படுத்தாதவராக ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராக ஒதுங்கி வாழ்பவர். என்றும் ஆய்விலும் அறிவதிலும் அறிவிப்பதிலும் உண்மையுடன் உழைப்பவர். அதனாலேயே, அவரது உடல்நலக்குறைவு, பிற வசதியீனங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் "தமிழியல்சார் சிந்தனைத் துளிகள்" தொடர்ந்து சுரக்கின்றன. அவற்றின் இரண்டாவது தொகுதி எங்கள் கரங்களில் தவழ்கிறது.

வெகுஜன ஊடகங்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற, நுகர்வோரை மையப்படுத்திய சந்தைப் பொருளாதாரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் வெளியீடுகள் பெருகிக் குவிகின்ற நிலையில், அப்படியானவை ஆரவாரத்துடன் பெறுமதிமிக்கவற்றை அமுக்கி விடுவது பற்றிய ஆதங்கம் வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வாறான சூழலில் கசிவில் "சிந்தனைத் துளிகள்" அரிய நூல்களாக வெளிவருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

மனித சமுதாய வாழ்வுக்கும் பண்பாட்டுக்கும் இன்றியமையாத மொழியை எல்லோரும் பயன்படுத்து கிறார்களாயினும், அவர்களுள் மிகப் பெரும்பாலானவர்கள் மொழியின் இயல்புகளையும் செயற்பாடுகளையும் பற்றி எதுவும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், மொழியியலாளர்கள் மொழியின் நுட்பங்களையும் உலகில் வழங்கும் பல்வேறு மொழி வகைகளுக்கிடையிலான உறவுகளையும் ஊடாட்டங்களையும் ஆராய்பவர்கள். சமூகத்துக்கும் அதன் பண்பாடு புவியியல் முதலானவற்றுக்கும் அச்சமூகம் பேசும் மொழிக்கும் இடையிலான தொடர்புகளை உணர்ந்தவர்கள். பொது மொழி - கிளைமொழி - எழுத்துவழக்கு - பேச்சுவழக்கு முதலான வேறுபாடுகளையும், வட்டாரவழக்கு, குழுவழக்கு, நேர்மொழி, குறிப்புமொழி முதலானவற்றின் தாற்பரியங்களையும் நன்கு அறிந்தவர்கள்.

குறித்த ஒரு மொழியின் குறித்த ஒரு கிளைமொழியைப் பேசுபவர் எல்லோருங்கூட நூற்றுக்கு நூறுவீதம் ஒரே விதமாகப் பேசுவதில்லை; எழுதுவதில்லை. ஒவ்வொரு தனிமனிதருக்கும் தனிநடை உண்டு. "உலகத்திலே எத்தனை மனிதர்கள் வாழ்கிறார்களோ, அத்தனை மதங்கள் உண்டு" என்று இராமகிருஷ்ண பரமஹம்சர், மதம் பற்றிக் கூறியது மொழிக்கும் ஒரு வகையில் பொருந்தக் கூடியதே.

தமிழைப் பொறுத்தவரையில், பிராந்திய அடிப்படையில் நோக்குகின்றபோது இந்தியத்தமிழ் - இலங்கைத் தமிழ் என்ற வேறுபாடே முற்றென உணரப்படுவது. புவியியல், அரசியல், பண்பாடு முதலிய பல்வேறு விடயங்களின் அடிப்படையில் இலங்கை தமிழகத்திலிருந்து வேறுபட்ட பண்புகளைக் கொண்டது. அவை, இரு பிராந்தியங்களிலும் வழங்கும் தமிழிலும் வேறுபாடுகள் உண்டாவதற்கான ஏதுக்களாயின. அவ்வகையில் இரு பிராந்தியங்களிலும் வழங்கும் தமிழில் சொல், பொருள் நிலையிற் காணப்படும் வேறுபாடுகள் இந்நூலின்கண் நன்கு துலக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் சுசீந்திரராஜா, தமிழ்நாட்டிலும் கணிசமான காலம் வாழ்ந்தவர். அங்கிருந்த புலமையாளர்களோடும் சாதாரண மனிதர்களோடும் பழகியவர். இரு பிராந்தியத்து எழுத்துக்களையும் நன்கு பயின்றவர் - அவதானித்தவர். அவ்வகையில், இரு பிராந்தியங்களின் தமிழ் வழக்குகளுக்கு இடைப்பட்ட வேறுபாடுகளை அறுபவ ரீதியாகவும் அறிவுரீதியாகவும் வெளியிடக் கூடிய தகுதிப்பாடு வாய்க்கப்பெற்றவர். அவ் வேறுபாடுகளைத் துலக்குவதற்கு ஏற்ற அடிப்படைக் கருவியாக, இலங்கைத் தமிழின் முக்கியத்துவத்தையும் தனித்துவத்தையும் அங்கீகரிக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon), க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ஆகியவற்றைக் கொண்டு மிகுந்த சிரமத்துடனும் அவதானத்துடனும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். அந்த அகராதிகள் இரண்டோடு வேறு சில அகராதிகளையும் ஏலவே இலங்கைத் தமிழ் வழக்குத் தொடர்பாக வெளிவந்த ஆய்வுகளையும் அவர் துணைக்கொள்கிறார். மேலே குறிப்பிட்ட அகராதிகள் இரண்டும் தவறவிட்டவற்றையும் மிகக் கவனத்தோடு தேடித் திரட்டியுள்ளார். இலங்கையில் மாத்திரம் வழங்கும் தமிழ்ச் சொற்களின் வழக்கு வேறுபாடுகளையும் அவை வழங்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார். அவ்வகையில் இந்நூலில் அமைந்துள்ள கட்டுரைகளைப் படிக்கும்போது எம்மையும் எமது மொழியையும் பற்றிய செம்மையான அறிவு எமக்கு ஏற்படுகிறது. இக் கட்டுரைகள் இலங்கைத் தமிழர்களாகிய எமது இருப்பின் தொன்மையையும் வன்மையையும் நிறுவுவனவாக என் பதும் முக்கியமாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.


இந்நூலின் கண் இலங்கைத் தமிழ் வேறுபாடுகளையும் அவற்றுக்கான காரணங்களையும் வகைப்படுத்தி நோக்கும் முறைமை மிகவும் செம்மையானது. அவ்வகையில், தமிழ்நாட்டில் வழக்கொழிந்து போக இலங்கையில் மட்டும் நிலைபேறு பெற்று இன்றுவரை வழங்கிவரும் சொற்கள் என்று வகைப்படுத்தப்படுவன முக்கியமானவை. அவற்றுட்பல இன்று கிடைக்கப் பெறுகின்ற தமிழின் தொல்சீர் இலக்கியங்களிற் பயின்று வருபவை என்பதை எடுத்துக்காட்டி இலங்கைத் தமிழில் பழமை பேணப்படுவதோடு புதுமை ஏற்றுப் போற்றப்படுவதையும் அவர் நிறுவுகிறார். இலங்கைத் தமிழ்மொழியினதும் தமிழ் இலக்கியத்தினதும் வரலாற்றுத் தொடர்பில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கும் எமது இருப்பின் தொன்மையை உறுதிப்படுத்துவதற்கும் கசிவின் ஆய்வுகள் உதவுபவையாகவும் உற்சாகமளிப்பனவாகவும் அமையும்.

**தமிழியல்சார் சிந்தனைத் துளிகள் – 2**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சுசீந்திரராஜா |
| பக்கம் | : | 180 |
| விலை | : | 480.00 |
| வெளியீடு | : | சேமமடு |

சபா.ஜெயராசா

# முதுசம்




மனித அவலங்களின் நுணிக்கைகள் முடிவிலியாய் வளர்ந்து பரந்து செல்லும் நிலையிலே சிறு"கதையின் வெளி" மேலும் விரிவாகிக் கொண்டு செல்கின்றது. சிறுகதை வெளியிற் பல்வேறு நிலைகளிலும் நனவுக ளிலும் எழுகோலம் விசைகளிலும் கருத்தியல் நோக்கு களிலும் ஆக்கங்கள் பன்மைநிலைகளில் உருவாகிய வண்ணமுள்ளன. நாம் என்ற அழகியல் நியமங்களைக் கடந்தும் தாழ்ந்தும் வீழ்ந்தும் எழும் சிறுகதைக் கோலங்கள் மரபுவழியான திறனாய்வு அளவு கோல்களை மேலும் திட்பநுட்பங்களை நோக்கி நகர்த்தி வருகின்றன. எளிமையான வரைபுகளைக் கொண்டிருந்த சிறுகதைத் திறனாய்வு அணுகுமுறைகள் அறிகைச் சிக்கல் அமைப்பாக்கம் நோக்கிய பெயர்ச்சியைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்றன.

அத்தகைய ஓர் எழுபுலத்திலே தான் சமகாலத்தைய சிறுகதைகளை அணுக வேண்டியுள்ளது. இந்தத் தொகுதியைத் தந்துள்ள நண்பர் தம்பு சிவா அவர்கள் இதழியலில் நீண்டகால அநுபவ வீச்சைக் கொண்டவர். செய்தி இதழ்களிலே பணிபுரிவோருக்குரிய சளைத்தலின்றி எழுதிக்கொண்டிருக்கும் ஆற்றல் அவரிடத்து மேலாக விசை பெற்றுள்ளது.

சிறுகதையாசிரியர்களின் அறிகைத்தளம் புறவுலகின் மெய்நுண் நுணிக்கைகளைத் தன்னமைவாக்கித் தெறித்துத் தரும் மொழி நுட்பவியலைக் கொண்டது. தம்புசிவா அவர்களது சிறுகதைகளிலே விரவியுள்ள அறிவிப்பு (Reporting) மொழிக்கோலம் இதழியல் அனுபவங்களிலிருந்து மேலெழுவதாகவுள்ளது. அது அளிக்கை நிலைப்பட்ட தொடர்பாடலாகின்றது.

இத்தொகுதியில் இடம்பெற்ற அனைத்துக்கதைகளும் ஒருவகையிலே "வெளிமலர்ச்சி நடப்பியல்" (Expressive Realism) சார்ந்தவையாகவுள்ளன. "எனக்குத் தெரிந்தவற்றைத்தான் நான் எழுதுகின்றேன்" என்ற கார்க்கியின் மேற்கோளை நூலாசிரியர் இணைத்திருத்தல் நடப்பியலை மீள வலியுறுத்துவதாகவுள்ளது. நாளாந்த வாழ்விலே நடப்பவற்றையும், கண்டு அனுபவித்தவற்றையும், ஈடுபாட்டுடன் நுகர்ந்து கொண்டவற்றையும் உணர்ச்சிகளை ஏற்றித்தருதல் கதைகளிலே காணப்படும் பொதுவான இயல்பாகின்றது. நடப்பியலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியியலும், உள்ளுணர்வும் வெளிமலர்ச்சி நடப்பியலை நோக்கி நகர்த்துகின்றன.

நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்தல் அல்லது காண்பிய மாக்குதல் சமூக நிலை அறிகையுடன் இணைந்த தோற்றங்களாகவுள்ளன. காண்பியமாக்கலுக்கும் உணர்ச்சிப்படுத்தலுக்குமிடையேயுள்ள தடைகள் சிறுகதைகளிலே தகர்ந்து நிற்றலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதாவது நடப்பியலோடு இணைந்த கற்பனைகளும் கதையாக்கங்களிற் சஞ்சாரம் செய்கின்றன.

சிறுகதைகளினூடே நிகழ்த்தப்படும் உறுமெய்மை களின் (Facts) பிரதிநிதித்துவப்பாடும் சிந்தனையின் பிரதிபலிப்புப்பாடும் சமன்பாடு கொள்ளுதல் இக்கதை களின் வாசிப்பின்போது தொடர்ச்சியாக முன்னெழுகின் றது. வாழ்க்கையின் சம்பவத் துணிக்கைகள் ஒவ்வொரு கதையிலும் நிலைமாற்றம் செய்யப்படும் பொழுது நடப்பு நிலவரங்கள் சிலாகித்து மேலெழுந்து நிற்கின்றன.

கதையின் எடுத்துரைப்பு வழியாக வாழ்க்கை மற்றும் சமகாலத் தைய ஆறல் பற்றிய மதிப்பீடுகளும், இயல்புகளும் பரவலாக்கம் செய்யப்படுகின்றன. அவ் வாறான மதிப்பீடுகளின் குழப்பமற்ற தொடர்ச்சி அமைந்தும் கதைகளிலும் காணப்படுகின்றது.

சமகாலச் சுரண்டலின் பன்முகத்தன்மைகளும், கோலங்களும், கதைகள் யாங்கும் விரவி நிற்கின்றன. அந்நிலையில் மொழிக் கையாளல், கற்பனையோடு பயணித்தலைக் காட்டிலும் நிலவரங்களோடு பயணித்த லாக வளர்ச்சியடைந்து செல்கின்றது. அந்நிலை யிலே சமகாலத்தைய அவலங்களோடு தோய்ந்து நிற்பவர்க ளுக்கு விலகலை விளைவிக்காத அரவணைப்பை அது நீட்டிச் செல்கின்றது. சுரண்டல் வினைகளோடு இசை வாக முடியாத கருத்தியலின் நீட்சியும் விரியும் நியாயங் களையும், நீதியையும் நோக்கிய தேடல்களுக்கு இட்டுச் செல்கின்றன. அதாவது பிறழ்நிலை கொள்ளாத வாச கரைக் குவியப்படுத்தும் சிறப்பினைக் காண முடிகிறது.

கதைகளின் வழியாக உருவாக்கப்படும் கருத்துரு வாக்கம், வெளிப்படையாகவும், மௌனமாகவும் நிகழும், சமூக சுரண்டலின் துலங்கல்களைத் தொட்டும் தொடர்ச்சிப்படுத்தியும் கட்டமைக்கப் பெற்றுள்ளது. கருத்துருவம் "விளைவு நிலையை" எய்துவதற்குரிய சந்தர்ப்பங்களும் சூழமைவும் தெரிவு செய்யப்பட்டுள் ளன. சமூகம் சார்ந்த எதிர்மலர் நடைமுறைகள் கருத்தி யல் சார்ந்த நடைமுறைகளுக்கு இட்டுச் செல்ல வேண் டிய தேவையைக் கதைகள் மறைமுகநிலையில் வலியுறுத்துகின்றன.

கதைகளினூடாக ஒருவித அறிவுக் கையளிப்பை மேற்கொள்ளல் ஆசிரியரின் நோக்கமாகின்றது. அந்நிலையில் அகவயம், புறவயம் என்பவற்றுக்கிடை யோரான பிரிகோடுகளும் தகர்ந்து விடுகின்றன. நேரடியான எடுத்துரைப்பும் கதை மாந்தர் வழியான உரைப்பும் அத்தகைய தகர்வை விசாலித்து முன்னெடுக் கின்றன. நடப்பியலைக் கருத்தியல் வழிப்பட்ட செயல் நிலைக்கு இட்டுச் செல்லல் மேலும் விசாலிக்கப்படு கின்றன.

கதைகளின் ஆரம்பத்தில் ஆங்காங்கே இடம் பெறும் "பிரகடன மொழிவு" (De Clarative Statement) கருத்தியலின் நேரடி எடுத்துரைப்பின் மீது ஆசிரியர் கொண்ட ஆர்வத்தைப் புலப்படுத்துகின்றது. அதனைத் தொடர்ந்து உரைவிளக்கமாகவும் உணர்ச்சி விளக்கமாக வும் கதைகள் வளர்ந்து செல்கின்றன. மனிதரிடை நிகழும் தொழிற்பாடுகள் வழியாக பிரகடனத்தின் நியாயப்பாடுகள் வழிநடத்திச் செல்லப்படுகின்றன. தனிநிலையிலும் சிக்கல் நிலையிலும் அவை வளர்ந்து செல்கின்றன.

கூறுபவற்றை உள்வாங்கிச் சுவைக்கும் நிலைக்கு மட்டும் வாசகரை மாற்றியமைக்காது சிந்திக்கவைத்து அறிகை நிலையிலே துலங்கச் செய்தலும் ஆக்கங்களிலே தெரிகின்றன. அதாவது, உள்வாங்கும் நிலையை துலங் கும் நிலைக்கு மாற்றுதல் ஆக்கநிலை நோக்காகி நிமிர்ந்து நிற்கின்றது. அந்த நிலையில் எழுந்துள்ள ஆக்கங்கள் ஆசிரியருக்குரிய தனித்துவத்தைப் புலப்பாடு கொள்ளச் செய்கின்றன.

சிறுகதை வடிவம் விரைந்தும், வளர்ந்தும், ஈரநிலையிலே செறிவுற்றும் செல்லும் உலக நிலைமையா னது எழுத்தாளருக்கும் திறனாய்வாளருக்கும் கூர்மை யான வெளிச்சத்தைக் காட்டுதலை இச்சந்தர்ப்பத்திலே குறிப்பிட வேண்டியுள்ளது. அதனை நோக்கிய அசைவு தொடர்ந்து நிகழ நூலாசிரியரை வாழ்த்துகின்றோம்.

**முதுசம்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | உ.சிவசுப்பிரமணியம் |
| பக்கம் | : | 168 |
| விலை | : | 260.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க. சின்னத்தம்பி

நூலகம்

# அறிகைத் தொழிற்பாடும் ஆசிரியரும்

பன்னிரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட பள்ளி ஆசிரியப் பணியின் அனுபவமும் இருபத்து ஐந்து வருடங்களுக்கும் மேற்பட்ட ஆசிரியர் கல்விப் பணியின் அனுபவமும் பின்னணியாக அமைந்திருக்க நூலாசிரியரின் கல்விசார் ஆய்வுகள், ஆசிரியர்க்கான பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பவற்றுக்கூடாக முகிழ்ந்த கருத்துக்கள் இந்நூலில் ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

இந்நூலின் பருமனை மட்டுப்படுத்தும் நோக்கில் மிக முக்கியமான சில அறிகைத் தொழிற்பாடுகள் மட்டும் இங்கு இடம்பெறுவதுடன், பல கருத்துக்கள் சுருக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும், பிரதானமான உளவியற் கருத்துக்கள் விரிவான விளக்கம் வேண்டி நிற்கும் சந்தர்ப்பங்களில், குறித்த உளவியலாளர்களின் ஆய்வு தொடர்பான, எளிமையான பரிசோதனைகளின் விபரங்களுக்கும் வியாக்கியானங்களுக்கும் இந்நூலில் இடமளிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ள விடயங்களின் ஒழுங்கமைப்பானது, கல்வி உளவியலறிவினைப் பெறுவதில் ஆசிரியரின் நிலைப்பாட்டை முதன்மையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.




கல்வி உளவியல் பற்றிய ஒரு பொதுவான விளக்கத்தினை வழங்கும் வகையில் முதலாவது இயல் சுருக்கமாக அமைகின்றது. கற்றலில் கவனமும் புலக்காட்சியும் மிக முக்கியமான பங்கினை வகிப்பதுடன், சிறந்த புலக்காட்சி பெறுதல் சிறந்த கற்றலின் அடிப்படையாக அமைவதனைக் கருத்திற்கொண்டு இவ்விடயம் இரண்டாம் இயலில் எடுத்தாளப்பட்டுள்ளது. கற்கப்பட்டவை கற்போரின் மனதில் நிலை நிறுத்தப்படுதலும், வேண்டும் போது அவை நினைவுபடுத்தப்படுதலும் கல்வியின் ஒரு பிரதான நோக்கம் மட்டுமன்றி, நாம் எல்லோரும் விரும்பும் ஒரு நிலைப்பாடுமாகும். இது கற்பிப்போனும் அக்கறை கொள்ளும் ஒரு விடயமாகும். இவ்விடயம் பற்றிய கருத்துக்கள் இயல் மூன்றில் விரிவாக நோக்கப்படுகின்றன.

கற்றலின் முதற்படி எண்ணக்கருக் கற்றலாகும். புலக்காட்சிபெறுதலும், பெறப்பட்ட புலக்காட்சிகள் ஞாபகத்திலிருத்தலும் எண்ணக்கரு உருவாக்கத்தின் பிரதான படிகளாகும். இவற்றினைக் கொண்டு எண்ணக்கரு உருவாக்கம் பற்றி அடுத்த இயல் விரிவடைகின்றது.

கற்றல் என்பதனால் கருதப்படுவது யாது? அது எவ்வாறு நிகழ்கின்றது. கற்றலுடன் தொடர்புடைய காரணிகள் யாவை? வகுப்பறைக் கற்றலை மேம்படுத்தும் வழிமுறைகள் யாவை? இவை போன்ற இன்னோரன்ன வினாக்களுக்கு விடைகாணும் தேவை ஆசிரியருக்குண்டு. இதன் பொருட்டு, பல்வேறு உளவியலாளர்களினதும் கற்றல் பற்றிய கருத்துக்கள், கோட்பாடுகள் என்பன அடுத்து வரும் இரண்டு இயல்களையும் அலங்கரிக்கின்றன. தூண்டல் - துலங்கல் வகையிலான கற்றலுடன் தொடர்புபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகள் இயல் மூன்றிலும், கள அறிகைக் கற்றற் கொள்கைகள் இயல் ஆறிலும் இடம்பெறுகின்றன.

கற்கப்படும் எவ்விடயமும் பின்னால் வரும் நிலைமைகளில் பயன்படுத்தப்படக்கூடியனவாக அமைய வேண்டுமென்பதே கல்விச் செயற்பாடுகளின் ஒரு பிரதான நோக்கமாகும். எனவே, குறித்த ஒரு வேளையில் ஏற்படுத்தப்படும் கற்றலானது எதிர்காலத் தேவைகட்கும் பிரயோகிக்கப்படக்கூடியவாறு அமைய வேண்டும். இந்த அம்சத்துடன் தொடர்புடைய கற்றல் இடமாற்றம் பற்றிய கருத்துக்கள் இறுதி இயலில் இடம்பெறுகின்றன.

ஆங்கில மொழிமூலமான வெளியீடுகளூடாக இத்துறைசார் அறிவினை மேம்படுத்த விளைவோரின் நலன்கருதி, இந்நூலில் இடம்பெறும் பிரதான உளவியற் பதங்களின் ஆங்கில வடிவத்தினை உள்ளடக்கிய கலைச்சொல் தொகுதியும், துணை நூற்பட்டியலும் பின்னிணைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் முக்கியமான கருத்துக்கள் அல்லது விடயங்கள் அமைந்துள்ள இடங்களை நூலிற் சுலபமாகக் கண்டறிய வழிசெய்யும் வகையில் விடயச்சுட்டி பின்னிணைப்பில் இடம்பெறுகின்றது.

பாடத்தைப் போதிக்க விழையும் ஆசிரியன் பாடப்பொருளை மட்டும் அறிந்திருத்தல் போதாது; தன் மாணவனையும் அறிந்திருத்தல் வேண்டுமென்பர் அறிஞர். மாணவனை அறிந்திருத்தல் எனும் போது, அவனது அறிகைசார், எழுச்சிசார், உள - இயக்கஞ்சார் விருத்திகள் பற்றி ஆசிரியர் அக்கறை கொண்டிருக்க வேண்டியமை வலியுறுத்தப்படுகின்றது. அத்துடன் ஒவ்வொரு பிள்ளையினதும், ஒவ்வொரு வகை விருத்திக்கும் விருத்திப் படிநிலைகளுக்கும் ஏற்பக் கற்றல் நிலைமைகளைக் கையாளும் திறனையும் ஆசிரியர் கொண்டிருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவனிடத்தே காணப்படும் மாற்றங்களினூடாகவே அவனிடத்தில் ஏற்படும் கற்றல் பற்றி நாம் அறிய முடிகிறது. ஆயினும், மாணவனிடத்தில் ஏற்படக்கூடிய நடத்தை இயல்புகள் யாவற்றையும் நாம் எமது புலனனுபவங்களினூடாக நேரடியாக அறிய முடியாது. பிள்ளையில் அவதானிக்கப்படக்கூடிய, பிற செயல்கள் அல்லது நடத்தை மாற்றங்களினூடாகவே அவனது அறிகை விருத்தி பற்றிய அனுமானங்களை மேற்கொள்கின்றோம். பன்னிரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட பள்ளி ஆசிரியப் பணியின் அனுபவமும் இருபத்து ஐந்து வருடங்களுக்கும் மேற்பட்ட ஆசிரியர் கல்விப் பணியின் அனுபவமும் பின்னணியாக அமைந்திருக்க நூலாசிரியரின் கல்விசார் ஆய்வுகள், ஆசிரியர்க்கான பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பவற்றுக்கூடாக முகிழ்ந்த கருத்துக்கள் இந்நூலில் ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

மனிதன் உலகில் வாழ்கின்றான், மனிதனால் உலகம் நிலை பெற்றுள்ளது. இரண்டுக்கும் இருப்பியல் முக்கியம், இருப்பியலானது மாற்றங்களோடு பயணிப்பது. மாற்றங்களைத் தன்னகத்தில் ஏற்படுத்தாத எவருக்கும் எதற்கும் இருப்பு அற்றுப் போகின்றது. எனவே, மாற்றங்களை உள்வாங்கிப் பிள்ளையைக் குவிமுகப்படுத்தி நோக்கவும், பார்க்கவும், அர்த்தமுள்ள சாத்தியமான பயணிப்புக்கு இந்நூல் உதவுமென நம்புகின்றோம்.

**நூலின் உள்ளடக்கம்**

- உளவியலும் ஆசிரியரும்
- கவனமும் புலக்காட்சியும்
- ஞாபகம்
- எண்ணக்கரு விருத்தி
- நடத்தை - துலங்கற் கற்றற் கொள்கைகள்
- கள அறிகை கற்றற் கொள்கைகள்
- கற்றல் இடமாற்றம்
- படைப்பாற்றல்
- மொழி விருத்தி
- கற்றலின் தகவல் முறைவழியாக்கல் மாதிரிகை
- பல்வகை நுண்மதிகள்
- மனவெழுச்சி நுண்மதிகள்

**அறிகைத் தொழிற்பாடும் ஆசிரியரும்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | க.சின்னத்தம்பி / க.சுவர்ணராஜா |
| பக்கம் | : | 216 |
| விலை | : | 560.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பரீந்தகணேசன்

# கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்



எல்லோருக்குங் கல்வி, அறிவை ஆதாரமாகப்படுத்தல், சுயமாக அறிவை வளர்த்தல், போன்ற கல்விச் சிந்தனைகள் கல்வியை ஆக்கிரமிக்கும் இக்காலகட்டத்தில் புத்தாக்கங்கள், புதிய செல்நெறிகள், பல மொழியறிவு என பல்வேறு புதிய சிந்தனைகளும் கல்வியியல் உலகில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அறிவின் உலகளாவிய ஜனநாயகப் பண்பாடு இன்று தகவல் தொழில்நுட்பத்தினால் மேலும் வலிமை பெற்றுள்ளது. போர்க்காலங்களில் பாதுகாப்பு தொடர்பான விடயங்களிற்காக உருவாக்கப்பட்ட தகவல் பரிமாற்ற முறைமை இன்று முழு உலகையுமே ஊடறுத்துக் கொண்டு வந்துவிட்டது. இந்தப் பின்னணியில் தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவும் அதனைப் பயன்படுத்தும் திறனும் எம்மாணவர்களுக்கு அத்தியாவசியமானதும். எனவே மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வறிவும் திறனும் மிக அத்தியாவசியம் என்பது சொல்லவேண்டியதில்லை.

இப்புதிய நூற்றாண்டின் அறிவுசார்ந்த பொருளாதாரம், தகவல் தொடர்பாடல் அறிவும் கற்பித்தல் முறைமைகளில் மாற்றங்களை கோரி நிற்கின்றன. மீத்திறன் அதிகமாயுள்ளோர் இயல்பாகவே கற்றுத் தேர்ந்து கொள்வர். ஆனால் சராசரி மாணவரும் மெல்லக்கற்போரும் ஆசிரியரின் கற்பித்தல் முறைமைகளிலேயே தங்கியுள்ளனர். எனவே ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் விளைத்திறனைக் கருத்திற் கொண்டு தனது திறன்களை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். இத்தத்திறன் விருத்தியில் இன்று முக்கியமாக தகவல் தொழில்நுட்பத்தில் திறன் விருத்தி பெறுதல் அவசியமாகின்றது. இது ஆசிரியரின் தொழில்சார் விளைத்திறனையும் அதிகரிக்கும்.

ஆசிரியர்கள் தமது வாண்மை விருத்திக்காக நூல்களைத் தேடிப்படிக்கின்றனர். கருத்தரங்குகள், பட்டறைகளின் மூலம் அறிவைத் தேடும் முயற்சியில் இயங்குகின்றனர். இதற்கு சர்வதேச வலைப்பின்னலூடாக கணனியில் கிடைக்கும் அறிவுக் களஞ்சியங்கள் துணை புரிகின்றன. எனவே அவற்றை பயன்படுத்தி அறிவைப் பெறுவதற்கு அத்துறைசார்ந்த அறிவும், தொழில்நுட்ப அறிவும் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளை மெருகூட்ட உதவி புரிகின்றன.

கரும்பலகை முதல், எழுந்து அட்டைகள், வரைபடங்கள், ஒலியல், பூகோளம், திரைப்படங்கள், தொலைக்காட்சி, நாடகங்கள், கணினி, பல்லூடக எறிவிகள் என கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு பல்பரிமாணங்களைக் கடந்து வந்துள்ளது. இவற்றையெல்லாம் கையாளும் நுட்பமும் திறனும் மாணவர் சார்ந்த உளவியல் அறிவோடு சமயோசிதமாக சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தும் அறிவும் ஆசிரியர்களுக்கு வாய்க்க வேண்டும்.

ரஷ்ய உளவியல் சிந்தனையாளர் விகொட்ஸ்கி கூறியது போல மாணவர்களின் அறிவுசார் வளர்ச்சிக்கு சாரமரம் (அறிகை எழல்) கட்டுமானம்போல இந்த காண்பிய மற்றும் செவிவழி ஊடகங்களும் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியான கணினி சார்ந்த பல்லூடக எறிவிகளும் கற்றலை மேலும் சாத்தியமாக்குகின்றன.

கல்வியில் தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் எனும் இந்நூலின் கற்பித்தல் நுட்பங்கள், கற்பித்தல் முறையியல், தொடர்பாடல் தொழில்நுட்பமும், ஒத்துழைத்துக்கற்றல் மற்றும் பன்முக நுண்மதிக் கோட்பாட்டில் வன்பொருள், மென்பொருள் பிரயோகம் ஆகிய விடயங்களை ஆசிரிய உலகத்திற்கு அறிமுகப்படுத்துகின்றது.

| கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | க.[illegible] |
| பக்கம் | : | 120 |
| விலை | : | 300.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.கே.மணிவாசகர்

சேமமடு புதுவரவு

# அரசியலும் சிவில் சமூகமும்

அரசறிவியலில் சிவில் சமூகம் என்பது உருவகம் பெற்றுவரும் புதியதோர் எண்ணக்கரு ஆகும். சிவில் சமூகம் என்பது தனியார்துறை, அரசு சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் பல்வேறு விதமான அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது. சிவில் சமூகமானது அரசியலுக்கு அப்பாற்பட்டதாயினும், அவ்வப்போது அரசை விழிப்படைய வைப்பதிலும், நல்வழிப்படுத்துவதிலும் கணிசமான பங்கை ஆற்றவல்லது. சிவில் சமூகத்திற்கும் அரசுக்குமிடையிலான நல்லெண்ண முமம், நல்லுறவும் ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அடிநாதம் எனலாம். "அரசியலும் சிவில் சமூகமும்" என்ற இந்நூல் காலத்தின் தேவையும், கருத்துச் செறிவு மிக்கதும் ஆகும்.

திரு.ரீ.விக்னேஸ்வரன் அவர்கள் இந்நூலை எழுதுவதற்கு முக்கியமாக இரு வழிகளில் தகுதிபெற்றுள்ளார். முதலாவதாக அவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் துறையின் முன்னாள் (ஒப்பந்த அடிப்படையிலான) விரிவுரையாளரும், தற்போது வருகை விரிவுரையாளரும் ஆவார். இரண்டாவதாக, நெடுங்காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தின் தோட்டரிக்ட் கழகத்தின் அங்கத்தவராக இருந்துவரும் அவர் சமீபத்தில் (2009- 2010) அதன் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இத்தகைய அறிவுப் பரப்பும், அனுபவச் சிறப்பும் நூலை அணிசெய்வதை நாம் காணலாம்.

"அரசியலும் சிவில் சமூகமும்" என்பது விரிந்ததோர் அறிவுப் பரப்பாகவும், தமிழில் அவசப்படாத ஒன்றாகவுமே இருக்கின்றது. ஆனால் இந்நூல் அரசறிவியல் மாணவர்களுடனும், ஆர்வமுள்ள வாசகர்களுடனும் பல புதிய செய்திகளை, புதிய கோணத்தில் பகிர்ந்துகொண்டு தனது பங்களிப்பை உறுதிப்படுத்தியுள்ளது.




**அரசியலும் சிவில் சமூகமும்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | ரீ.விக்னேஸ்வரன் |
| பக்கம் | : | 104 |
| விலை | : | 260.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் புதிய தடங்கள்




இன்று கல்வியியல் துறையில் பல்வேறு புதிய புதிய நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஏனைய அறிவுத் தொகுதிகளுடன் ஒப்பிடும்பொழுது கல்வியியல் எழுத்துக்கள் அதிகம். இதற்குக் காரணமானவர்களாக இருப்போரில் பேராசிரியர் சோ.சந்திரசேகரனும் குறிப்பிடத்தக்கவர்.

உலகளாவிய ரீதியில் கல்வித் துறையில் இன்று பல்வேறு புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்களை தமிழ் வாசகர்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில் ஆக்கங்கள் வெளி வருகின்றன. இவ்வாறு ஆக்கம்பெற்ற பதினாறு கட்டுரைகளைத் தொகுத்து "கல்வியில் புதிய தடங்கள்" எனும் தலைப்பில் பேராசிரியர் சந்திரசேகரன் நூலாகத் தருகின்றார்.

கல்வியியலில் ஏற்பட்டுவரும் புதிய சிந்தனைகள் செல்நெறிகள் முதலானவற்றை இந்நூலில் இனங்காணலாம். குறிப்பாக அறிவுப் பொருளாதாரம், அறிவுச்சமூகம் முதலான எண்ணக்கருக்களின் அறிமுகம், இவை கல்வி சார் நடைமுறைகளில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதையெல்லாம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

மேலும் கலாநிதி பந்துல குணவர்த்தனாவின் கல்வி அறிக்கை, இலங்கை கல்வி முறை எதிர்நோக்கும் பிரச்சினைகள், இலங்கையில் சர்வதேசப் பாடசாலைகள், பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் முதலான கட்டுரைகள் இலங்கைச் சூழலில் கல்வி முறைமையின் இயக்கம் எவ்வாறு உள்ளது என்பது பற்றிய விமர்சனக் குறிப்புக்களையும் தருகின்றது. இதைவிட உலகில் சிறந்த பல்கலைக்கழகங்கள், காலாவதியாகும் பல்கலைக்கழகப் பட்டங்கள், பல்கலைக்கழகங்களில் வன்செயலும் பகிடிவதையும் முதலான உயர்கல்வி தொடர்பிலான சிந்தனைகளையும் பிரச்சினைகளையும் முன்வைக்கின்றது. மலேசிய, இந்திய, சிங்கப்பூர் முதலான நாடுகளில் கல்விக் கொள்கை, மொழிக்கொள்கை முதலான விடயங்களும் அலசப்படுகின்றது.

"கல்வியில் புதிய தடங்கள்" எவ்வாறு? எப்படி? வடிவம் கொள்கின்றது என்பது பற்றிய சில அடிப்படைப் புரிதல்களை மற்றும் சில கேள்விகளை மாற்று அணுகு முறைகளை முன்வைக்கின்றது. இவை நூலவர் பொது கல்விக் கொள்கைகள் பற்றிய விளக்கங்களையும் விசாரணைகளையும் பலதிசைகளிலிருந்து மேற்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

"கல்வியில் புதிய தடங்கள்" எனும் நூலானது கல்வித் துறையில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்களை வளர்ச்சிகளை நமக்கு அறிமுகம் செய்கின்றது. கல்வித் துறையில் ஈடுபாடு உள்ளவர்கள் மட்டுமன்றி ஆர்வம் கொண்டவர்களும் வாசிக்கத்தக்க நூலாக இது அமைகின்றது.

**கல்வியில் புதிய தடங்கள்**


| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சோ.சந்திரசேகரன் |
| பக்கம் | : | 128 |
| விலை | : | 300.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபா.ஜெயராசா
இரத்தினம் நவரத்தினம்

# கல்வித் தத்துவம்




பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்திலே கல்வித் தத்துவத்தைத் தமிழ்மொழி மூலம் கற்பித்த முன்னோடிப் புலமையாளர். போதனா மொழி பற்றிய தெளிவான சிந்தனை கொண்ட ஒரு சமூக விஞ்ஞானி.

உயர்நிலையான ஆய்வுகளைத் தமிழ்மொழி வாயிலாக மேற்கொள்ள முடியும் என்பதை நிரூபணமாக்கிய ஆய்வாளர்.

தாய்மொழியே கல்வி மொழியாக இருத்தல் வேண்டும் என்பதிலே மாற்றமில்லாத உறுதிகொண்டவர். தாய்மொழிக் கல்வி வாயிலாகவே புதிய கண்டுபிடிப்புக்களையும் சமூக நலன்களையும் விரிந்த அளவிலே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை ஆதாரங்களுடன் வலியுறுத்தியவர்.

மட்டுநகர் சிவானந்த வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலே கல்விகற்ற அவருக்குக் கல்வித்தத்துவத்தின் மீது ஆழ்ந்த ஈடுபாடு ஏற்படலாயிற்று. அத்தகைய ஈடுபாட்டுக்கு இளமைக் காலத்திலே சுவாமி விபுலானந்தரது அரவணைப்பே பின்புலமாயிற்று. அதன் தொடர்ச்சியாக இலண்டன் பல்கலைக்கழகத்திலே தமது கலாநிதிப்பட்ட ஆய்வுக்கு உலகளாவிய ரீதியில் வியாபித்த இராமகிருஷ்ணமிஷன் கல்விச் செயற்பாடுகளை உட்படுத்தினார்.

அவர் மேற்கொண்ட அந்த ஆய்வு பின்னர் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்தன. ஆசியாவின் நவீன மெய்யியற் சிந்தனை மரபுகளைத் தாழ்த்து மதிப்பீடு செய்த பிரித்தானியப் பேராசிரியர் சிலரோடு அவர் முரண்பாடு கொண்டமை பின்காலனியச் சூழலிலே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

கல்வித் தத்துவம் தொடர்பாக மிகவும் ஆழ்ந்த நோக்குடையதும், விரிந்த தரிசனமுடையதும் புலமைப் பயனுடையதுமான நூலை வெளியிட்ட முன்னோடிப் பேராசிரியராகவும் அவர் விளங்கினார்.

கல்வித்தத்துவத்தை உயர்நிலையில் எடுத்துரைப்பதற்குரிய வலுவான மொழிக்கட்டமைப்பைத் தமிழில் உருவாக்கிய புலமையாளராக அவர் செயற்பாடு கொண்டமையை மறந்துவிட முடியாது.

சபா.ஜெயராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் கல்விப் பிரச்சினைகளைப் புதிய நோக்குடன் அணுகுதலும், எங்கள் கல்வி மரபுகளின் நிறைகளையும் குறைகளையும் புனர் மதிப்பீடு செய்தலும் முன் எக்காலத்தையும் விட இக்காலத்தில் மிகவும் அவசியம் என்பது தெளிவு. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கல்வித் துறையிற் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் இந்நூல் ஆசிரியராகிய திரு.ப.சந்திரசேகரம் அவர்கள் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, கல்வித்தத்துவம், கல்விக் கோட்பாடுகள் பற்றிப் புதிய முறையிற் கற்றல், ஒரு முக்கிய சாதனமாக விளங்கும் எனும் கருத்துடையவர். ஆசிரியர் வரலாற்றிற் கல்வி பற்றிய புதிய விளக்கங்களுக்கமையத் தங்கள் முயற்சிகளை மீள மதிப்பிடுதலில் விருப்பமுடையோராதும், கல்வித் தொழிலில் நீண்ட அனுபவம் படைத்தோராதும், பொருட்டே இந்நூல் முக்கியமாக எழுதப்பட்டது. ஸ்ரீலங்காவில் எதிர்காலத்தில் பயிற்றப்படும் பல்கலைக்கழகக்கல்வி, பொதுக்கல்வி ஆகியவற்றில் நாட்டமுடையோருக்கும் இந்நூல் பயன்படக் கூடும்.

மேலைத்தேயக் கீழைத்தேயக் கல்விக் கோட்பாடுகளும் பயிற்சி முறைகளும் சம்பந்தமான முக்கிய கொள்கைகளுக்குப் புத்துயிரூட்டலும், கல்விப் பிரச்சினைகளை வரலாற்று ரீதியில் அணுகுதலுமாகிய தம் முக்கிய நோக்கத்தில் ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார். காலங் காலமாக வந்த தத்துவவியல், உளவியல், கல்வியியல் பற்றிய எழுத்தாளரதும் சிந்தனையாளரதும் கொள்கைகளையும் சமூக விஞ்ஞானத்தில் சில நோக்கங்களையும் விளக்கி அவை அமைந்ததையும் கல்வித்துறையில் உழைப்பவர்கள் பொருட்டு ஒருங்கு தொகுத்தளிப்பதில் அவர் மேற்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது.

கல்வித்துறையில் மேற்படிப்பை மேற்கொண்ட பல்வேறுபட்ட கலாசாரத்தையுடைய பட்டதாரி மாணவர்களுக்குக் கல்வித் தத்துவம், கோட்பாடு, ஒப்பீட்டுக் கல்வி, கலைத்திட்ட அமைப்பு ஆகியவற்றை ஸ்ரீலங்கா பல்கலைக்கழகத்தின் கல்வித்துறையில் பதினைந்து ஆண்டு காலமாகக் கற்பிக்கும் வாய்ப்பு ஆசிரியருக்கு இருக்கிறது. இந்த ஆழ்ந்த அனுபவத்தின் பயனாக எழுந்ததே இந்நூல்.

வரலாறு, அரசியல், பொருளியல், சமூகவியல், மானிட சாத்திரவியல், உளத்தத்துவவியல், தத்துவ சாத்திரம் போன்ற வேறுபட்ட துறைகள் மூலம் பெறப்படும் விளைவுகளை ஒன்றிணைத்துக் கல்வித் துறைக்குப் பயன்படுத்துவதன் மூலமே, சமூகத்தில் கல்வியின் பங்கு பற்றிய உண்மையான விளக்கம் அதிகரிக்கும் என்பதே எமது துணிவு. கல்வித்துறையில் இன்றுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இத்தகைய அடிப்படையான வழியை மேற்கொண்ட முயற்சிக்காக யான் ஆசிரியரைப் பெரிதும் பாராட்டுகின்றேன். கல்வித்துறையின் பயனும் ஆய்வும் பற்றியும் உலகப் பொது நோக்குடனும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இரத்தினா நவரத்தினம்

**நூலின் உள்ளடக்கம்**

- கல்வியின் வரையறை
- கல்வியும், மரபும், மாற்றமும்
- பிளேட்டோ கண்ட கல்வித் தத்துவம்
- ரூசோ போற்றிய கல்விநெறி
- கார்ல்மார்க்ஸ் கொண்ட கல்விச் சிந்தனை
- ஜோன்டூயி வழங்கிய கல்விமுறை
- காந்தியடிகள் கற்பித்த கல்வித் திட்டம்
- தாகூர் தந்த கல்விக் கருத்து
- சமூகமும் சிந்தனைக் கதிர்கள்
- கல்வியும் அரசியலும்
- கல்வியும் பொருளாதார விருத்தியும்
- சமூகக் கல்வி
- சமூகக் கல்விசார் சாதனங்கள்
- கலைத்திட்டம் - வரைவிலக்கணம்
- கலைத்திட்டம் அமைப்பு
- இலங்கையின் நவீன கல்வித்திட்டம் (ஓர் ஆய்வு)
- பல்கலைக்கழகக் கல்வித் தத்துவம்
- நல்லாசிரியரின் இலக்கணம் அதன் தோற்றமும் வளர்ச்சியும்
- கல்வியும் உலகநெறியும்

**கல்வித் தத்துவம்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பேரா.ப.சந்திரசேகரம் |
| பக்கம் | : | 228 |
| விலை | : | 560.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை சந்தைப்படுத்தல்: ஓர் அறிமுகம்

இந்நூல் காலத்தின் தேவைகருதி வெளியிடப்படுகின்றது. தமிழ்மொழி மூலமாக உயர்கல்வியைத் தொடருகின்ற மாணவர்களுக்கு மட்டுமன்றி சாதாரண பொதுமக்களுக்கும் பயன்தரக் கூடியதொன்றாகும். இன்றைய நவீன உலகில் சேவைச் சந்தைப்படுத்தல் என்பது ஒவ்வொரு தனிநபராலும் தெரிந்து கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். வணிக உலகில் பெரும் பங்கினை வகிப்பதாக சேவைத்துறை மாறிவருவதனால் அதனைச் சிறப்பாக வும் மேற்கொள்ள அதன் சந்தைப்படுத்தல் நுட்பங்களை அறிந்துகொள்ளும் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. அதற்கென ஆங்கிலத்தில் பல நூல்கள் வெளிவந்த போதும் தமிழில் மிக அரிதாக சில நூல்கள் காணப் படுகின்றன. அந்நிலையில் திரு.சி.சிவேசன் அவர் களினால் எழுதப்பட்ட "சேவைச் சந்தைப்படுத்தல் ஓர் அறிமுகம்" எனும் நூல் சமூகத்துக்குப் பெரும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

பேரா.க.தேவராஜா

வியாபாரம் மற்றும் துணைநிலைச் சேவைகளை உள்ளடக்கியது வணிகம் எனப்படும். உற்பத்தி வியாபார நடவடிக்கைகளினைத் துரிதப்படுத்துவதற்கும் அதனை விருத்தி செய்வதற்கும் சந்தைப்படுத்தல் மிகவும் அவசிய மானது ஆகும். இதன் காரணமாகவே இன்றைய உலகில் "சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்" பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றது. வணிக நிறுவனங்கள் தமது வியாபார நடவடிக்கையின் மூலம் இலாபத்தினைப் பெற்றுக் கொள்கின்ற போதிலும் வாடிக்கையாளர்களினைத் திருப்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு உடையனவாகவும் காணப் படுகின்றன. இவ்விடத்தில் நிறுவனத்தின் சேவையும், அதன் தரமும் முக்கியத்துவம் பெறுகின்றது.




இந்த அடிப்படையில் சந்தைப்படுத்தல் துறையின் இளம் விரிவுரையாளர் திரு. சி.சிவேசன் அவர்களினால் எழுதி வெளியிடும் "சேவைச் சந்தைப்படுத்தல்" எனும் நூல் முக்கியத்துவம் பெறுகின்றது.

பேரா.தி.வேல்நம்பி

**சேவை சந்தைப்படுத்தல்: ஓர் அறிமுகம்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சி.சிவேசன் |
| பக்கம் | : | 152 |
| விலை | : | 380.00 |
| வெளியீடு | : | சேமமடு |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறப்புப் பார்வை

சருபு.பத்மசம்பன்
க.ஐயாபிள்ளை

# ஓமந்தை மத்திய கல்லூரி

## நூற்றாண்டு நினைவையொட்டி...





நூறு ஆண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் வாழப் போகும் எம் கால்தடங்கள் பல இடங்களில் தடம் தடுமாறி நடந்த நடவடிக்கைகள் யாவற்றையும் ஒரு வரலாற்றுப் பதிவாக பதியப்பட்டு எம் பின்னோர்க்கு கடத்தப்படும் ஒரு ஆவணப்பதிவே, வரலாற்று சான்றே இந் நூற்றாண்டு மலர் என்பதை மிகவும் பணிவுடன் பதிவு செய்கின்றேன்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்த ஆரம்ப மாணவர்கள் அனேகமாக இன்று எம்மத்தியில் இல்லை. அவர்களின் பதிவுகள் அவர்தம் வாரிசுகள் மூலம் வாழலாம் என நினைக்கிறேன். ஆரம்ப பதிவுகள் பதியப்படாமலே இருக்கின்றது. அதே தவறை நாமும் எம் பின்னோர்களுக்கு கைமாற்றக்கூடாது என்பதற்காகவே நூறு ஆண்டு நிறைவையாவது ஓரளவு பதிந்து வைக்கவும் என்ற ஒரு முயற்சியே இந்நூற்றாண்டு மலர்.

இந்தக் காலப்பகுதியில் அதாவது போருக்குப் பின்னர் ஒரு பாரிய துன்பியல்களை சந்தித்த எம் வன்னி மக்கள் தமது பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் கல்வி கற்பதற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அவர்களுக்கு முதலில் நன்றியுடன் பாராட்டுக்கள். பலபேர் அயல் பட்டினங்கள், பெருநகரங்கள், வெளிநாடுகளில் தமது பிள்ளைகளை கல்வி கற்க அனுப்பியுள்ள வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில மண்ணின் மைந்தர்களை அடையாளம் தெரியாது டனும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் யாவரையும் தலைசாய்த்து வணங்குகின்றேன். வரலாற்றுப் பதிவுகளில் இந்நூற்றாண்டு கொண்டாடும் காலப்பகுதி யில் எமது பெற்றோர்களது புகைப்படங்களை இதில் பதிவு செய்து நாம் மகிழ்ச்சி கொள்கின்றோம். அத்துடன் எல்லா மாணவர்களின் புகைப்படங்களையும் வகுப்பு ரீதியில் இங்கே நாம் பதிவு செய்கின்றோம். அனேகமாக வேறு மலர்களில் பழைய மாணவர்களையும் இணைத் ததை நாம் இவ்வளவு பார்க்கவில்லை. மாணவர்களது புகைப்படங்களும் இங்கு ஒரு வரலாற்றுப் பதிவாகவே அமைகின்றது. தற்போது இப்பாடசாலையின் அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முத லானவர்களின் புகைப்படங்களும் இங்கே தனித்தனி யாகப் பதிவு செய்யப்படுகின்றது.

நாம் இந்த பாடசாலையில் படித்தோம் என்பதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் தற்போது கிடையாது. அப்படி இருந்தவைகளும் சோர்வுற்றில் பாதுகாக்க முடியாமல் அழிக்கப் பட்டுவிட்டன. இந்நிலையில் எமது பதிவுகள் எங்கோ ஒரு இடத்தில் குவியப்படுத்தப்பட்டு இருந்த காரணத்தினால்தான் இந்த துர்ப்பாக்கிய நிலை எமக்கு. இதை மாற்றும் எண்ணத்தில் வன்னிப் பிரதேச வாயிலில் அமைந்துள்ள ஓமந்தை மத்திய கல்லூரியின் நூற்றாண்டு மலர் வெளிவருகின்றது. இது ஒரு முழுமை யான ஆவணப்படுத்தலாக இல்லாதுவிடினும் ஓரளவாவது ஆவணப்படுத்தலாக வெளிவர முடிந்தவரை முயன்றிருக் கின்றோம்.

இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் இன்று உள்நாடு வெளிநாடு என்று சிதறுப்பட்டு வாழ்கின்றனர். இருப்பினும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலர் அரச பதவிகளிலும், தொழிலதிபர்களாகவும், நடப்பெறுந் களாகவும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இது எமக்கு மனநிறைவைத் தருகின்றது. தற்போது இங்கே கல்வி கற்கும் மாணவர்களும் எதிர்காலத்தில் நல்ல பிரஜைக ளாக வாழ வேண்டும் என்பது எனது பெரு விருப்பம். தற்போது கல்வியூட்டிக் கொண்டிருக்கும் அதிபர் உள் ளிட்ட ஆசிரியர் குழாம் அதற்காக அதிகம் பாடுபட வேண் டும் என்பதையும் எனது ஆசையாக இங்கு பதிவு செய்கின்றேன்.

நாம் விழுந்து விட்டோம் என்று எண்ணாமல் கல்வி மூலம் பல விடயங்களை எதிர்காலத்தில் சாதிக்கலாம். நிச்சயமாக இந்தக் கல்லூரி மாணவர்கள் சாதிக்க வேண் டும். கல்வி சம்பந்தமான விடயங்களுக்கு தொடர்ந்து என்னால் முடிந்த ஆதரவை வழங்குவேன். நாம் படிக்கும் காலத்தில் வசதிகள் இருந்தும் இல்லாமலே வாழ்ந்தும் படித்தோம். அதற்குப் பல காரணங்கள் உள்ளது. குறிப்பாக அறியாமையும், வெளியுலகம் தெரியாமையும் ஆகும். இன்று நிலைமை அப்படி இல்லை. நாட்டு நடப்புகள், சட்ட ஏற்பாடுகள், ஊடகங்கள் என்பன நமக்கு வழிகாட்டுகின்றன. கல்வியால் நாம் பல விடயங்களை இனி சாதிக்கலாம் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு உண்டு. மாணவச் செல்வங்கள் இதை நோக்கி முயற்சிக்க வேண்டும்.

இந்நூற்றாண்டு மலர் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த போது மிகவும் சந்தோசமாகவே ஏற்றுக் கொண்டேன். எல்லாம் முடிவும் நல்லபடியாக இந்த மலர் வரும் என முழுமையில் நம்பிக்கை வைத்தேன். என் நம்பிக்கை வீண்போகவில்லை. மலர் உருவாக்கத்திற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் யாவரும் உறுதுணையாக இருந்தார்கள். இவ்வேளை எமது பழைய மாணவர்கள் எப்படியும் நல்லதொரு மலரை வெளியிடுவதற்கு தொடர்ந்து ஆலோசனைகள் கூறிவந் தார்கள். மலருக்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பல்வேறு ஆக்கங்களைத் தந்து சிறப்பித் தார்கள். யாவருக்கும் நன்றியுடன் கூடிய வாழ்த்துக்கள்.

மலரில் இடம்பெறும் கட்டுரைகள் அனேகமானவை கல்வி பற்றியதாக அமைய வேண்டும் என விரும்பிக் கொண்டேன். இது இன்று தேவையானதும் கூட. இதனைக் கட்டுரையாளர்களிடம் கூறியபோது இதற்குப் பலரும் ஒத்துழைப்பு தந்து எமது நோக்கத்தை நிறை வேற்றினார்கள். அவர்கள் எல்லோருக்கும் அன்பு கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மலர் வெளிவருவதற்கு உள்நாடு வெளிநாடு என்று பங்களிப்பு செய்த பழையமாணவர்கள், நலன்விரும்பி கள், வியாபார பெருமக்கள் விளம்பரம் தந்து உதவியவர் கள் அனைவருக்கும் நன்றி கூற விரும்புகின்றேன். அவர்களின் நிதி உதவியால்தான் இம்மலர் இவ்வளவு பக்கங்களுடன் சிறப்பாகவும் கனதியாகவும் கொண்டுவர முடிந்தது. என்னுடன் அரும்பணியாற்றிய காப்பாளர் கள், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், மற்றும் அதிபர், இதழ் ஆசிரியர்கள், இதழ் செயற்குழு உறுப்பினர்கள், அச்சகத்தார்கள், தட்டச்சுப் பணியாளர் மற்றும் பல வழி களில் உதவிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும். யாவருக்கும் ஓமந்தை பிள்ளையார் அருள்புரிய வேண்டும் எனக்கூறி விடைபெறுகிறேன்.

சதுஷ.பத்மசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமந்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக விருந்து, படிப்படியாக வளர்ந்து இன்று இமந்தை மத்திய கல்லூரியாக விளங்கி நூற்றாண்டு விழாக் காணுஞ் சிறப்பை இக்கல்லூரியடைந்துள்ளமை எண்ணி, இக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் பூரிப்படைகின்றேன்; இந்த நிலைக்கு இப்பாடசாலையை உயர்த்த உதவிய ஆசிரியப் பெருந்தகைகளை நினைவுகூர்ந்து நெஞ்சம் நெகிழ்கின்றேன்; நூற்றாண்டு விழாவினையொட்டி வெளியிடவிருக்கும் எழுகதிர் நூலில் எழுதும் வாய்ப்பினைப் பெரும்பேறாகக் கருதிப் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆரம்பப் பாடசாலையாகவிருந்து படிமுறை வளர்ச்சி கண்டு இன்று மத்திய கல்லூரியாக விளங்க எத்தனையோ பெருமக்கள் தன்னலம் அர்ப்பணிப்புடன் செய்த செயற்பாடே காரணமாக அமைந்திருக்கின்றது. அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், கல்வித்திணைக்களம், வவுனியா பாராளுமன்றப் பிரதிநிதிகள் போன்ற பலரதும் தன்னலமற்ற சேவையின் திரண்ட வடிவமாகவே கல்லூரி இலங்குகின்றது. அவர்களுள் சிறப்புப் பணியாற்றிப் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையிலே தடம் பதித்த சிலரைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறுதல் பொருத்தமுடையது எனக் கருதுகின்றேன்.

30.01.1911இல் ஆரம்பித்த இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு.சின்னத்தம்பி என்பவர் விளங்கினார். இவர் அர்ப்பணிப்போடு தொடர்ந்து இப்பாடசாலையை நீண்ட காலம் பணியாற்றி இப்பாடசாலையை நிரந்தர பாடசாலையாக இயங்க வழிவகுத்தார். இவரது சேவை பற்றிய விரிவான ஆவணங்களோ அதிபர் பெயர்ப் பதிவேடுகளோ காணக் கிடைக்காதபடியால் அவருடைய சேவையைப் பற்றி விரிவுரைக்க முடியவில்லை. முதலில் புகையிரத நிலையத்துக்கு மேற்கிலமைந்திருந்த பாடசாலை 01-10-23 தொடக்கம் அதிபராகவிருந்த திரு.கே.சுப்பிரமணியம் அவர்கள் பெருமுயற்சியால் 1927ஆம் ஆண்டு தற்போதைய காணியிலே கிடைக்கப்பெற்று இப்பாடசாலை தனக்கென தனியான இடத்தைப் பெற்றுக் கொண்டது. ஆ. செல்லையா வேல் கட்டிடப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. 1925ஆம் ஆண்டு வவுனியா மாவட்டம் உருவாகவில்லை. முல்லைத்தீவு மாவட்டமே இருந்தது. முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபரின் சிபாரிசின் படி கொழும்பு கல்வித் திணைக்களத்தின் சம்மதம் பெற்று இலங்கைப் புகையிரதப் பகுதியினரால் பாடசாலையின் அதிபர் திரு.கே.சுப்பிரமணியம் அவர்கள் தமது ஆசிரியப் பணியுடன் பயணச் சீட்டு முகவராக (Ticket Agent) வும் நியமிக்கப் பட்டுச் சேவையாற்றினார். காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 3.45 மணிக்கும் இந்நிலையத் தில் புகைவண்டிகள் தரித்து நிற்கும். காலை 10.30 மணியளவில் 15 நிமிட இடை வேளையை மாணவர்களுக்கு வழங்கி பயணச் சீட்டு வழங்கும் பணியைச் செய்துவர இவர் [illegible]

பின்னர் வவுனியா இறம்பைக்குளத்தைச் சேர்ந்த திரு.பி.கே.அம்ப்றோஸ் அவர்களும் அவர் மனைவி திருமதி ஏ.கே.அம்ப்றோஸ் அவர்களும் 01.11.1929 தொடக்கம் இப்பாடசாலைக்கு மாற்றம் பெற்று வந்தனர். சிறந்த சேவையாளரான அதிபர் அம்ப்றோஸ் அவர்கள் கற்பித்தலில் கூடிய கவனம் செலுத்தியதோடு இப்பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கவும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். பாடசாலைக் கட்டிட வேலையைத் துரிதப்படுத்தி 1930ஆம் ஆண்டில் தற்போது பாடசாலை இருக்கும் காணியில் நிரந்தரக் கட்டிடத்தில் இப்பாடசாலை இயங்கத் தொடங்கியது. மாணவர் வரவு அதிகரித்ததோடு கல்வியும் சிறப்பாக அமைந்திருந்தது. பெற்றோரால் பெரிதும் மதிக்கப் பெற்ற அதிபராக விளங்கி 31.05.1935 வரை கடமையாற்றி இளைப்பாறினார்.

அதன்பின்னர் இருவர் அதிபராகக் கடமையாற்றிய பின்னர் 01.11.41 தொடக்கம் காரைநகரைச் சேர்ந்த திரு.எ.ஆறுமுகம் அவர்கள் கடமையேற்று 31.08.50 வரை கடமையாற்றினார். இவரது 9 வருடகாலத்தில் பாடசாலை வளர்ச்சியில் முன்னேற்றம் இல்லாமல் போனது. கல்வித்தரமும் மாணவர் வருகையும் வீழ்ச்சியடைந்திருந்தன. இந்நிலையில் 01.09.50 தொடக்கம் பண்டிதர் திரு.செல்லத்துரை சிவலிங்கம் அவர்களும் திருமதி பாக்கியம் சிவலிங்கம் அவர்களும் முறையே அதிபராகவும் உதவி ஆசிரியராகவும் எடுக்கலப்பிட்டி மத்திய கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்று இப்பாடசாலைக்கு வந்தனர். இவர்களது வருகை பாடசாலை வளர்ச்சிக்கு ஒரு மைல்கல்லாக அமைந்தது. இன்று வரை சிலர் ஐந்தாம் வகுப்புக்கு மேல் கல்வி கற்கும் வசதியில்லாமல் இருந்தனர். ஆறாம் வகுப்பில்லாத காரணத்தால் பள்ளிப் படிப்பை நிறுத்திக் கொண்ட மாணவர் சிலரும் ஐந்தாம் வகுப்பிலேயே தொடர்ந்து படிக்காமல் பாடசாலைக்கு வராமல் பிள்ளைகள் சிலர் இருப்பதையும் கண்ட அதிபர், பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர்சங்கம் இல்லாத காரணத்தால் கிராமத் தலைமைக்காரர் (விதானையார் திரு.தம்பையா [illegible]) அவர்களையும் அழைத்துக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று பாடசாலையை விட்டு விலகிநின்ற மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் சந்தித்து உரையாடி மீண்டும் அவர்களைப் பாடசாலையில் இணைத்துக் கல்விப்பயணத்தைத் தொடர்ந்தார். 1951ஆம் ஆண்டில் கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் ஆறாம் வகுப்பையும் அதைத் தொடர்ந்து ஒவ்வொராண்டும் ஒவ்வொரு வகுப்பாகக் கூட்டிச் சென்று 1956ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலைத் தராதர பத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பையும் உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பையும் (தற்போதைய க.பொ.த (உயர்தர) வகுப்பு) வைத்து நடத்தினார். இக்காலத்தில் பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இவர் அதிபராகக் கடமையாற்றிய 01.08.50 தொடக்கம் 30.04.1968 வரையான காலப்பகுதி இக்கல்லூரி வரலாற்றின் பொற்காலமெனலாம்.

இக்காலத்தில் மாணவர் வரவு, கட்டடங்கள் விளையாட்டிடம் அமைத்தல், கல்வி வளர்ச்சி, கலைகள் வளர்ச்சி, விளையாட்டுத்திறன் அபிவிருத்தி, சமூகத்துடனான உறவு என்பன போன்ற பல்வேறு அம்சங்களில் மேம்பாடு காணப்பட்டதோடு பிரதேச மக்களது பாரம்பரிய பழக்க வழக்கங்கள், கருத்துநிலை, உடையலங்கு ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க நன்மாற்றங்கள் நிகழ்வதற்கு வழிகாட்டியாகவும் உந்துசக்தியாகவும் அதிபர் விளங்கினார்.

கிராமங் கிராமமாகச் சென்று செய்த பிரசாரத்தின் பயனாக பாடசாலையை நீங்கிய மாணவர்களைத் திரும்பச் சேரச்செய்தும் நாலுவயதும் 9 மாதமும் நிறைந்தவர்களை பாடசாலையில் சேர்ப்பித்தும் பெற்றார் ஆசிரியர் சங்கத்தை உருவாக்கிப் பெற்றோருக்கு அறிவுரை ஆலோசனை வழங்கியும் மாணவர் வரவினை அதிகரிக்கச் செய்தவர் அதிபர் அவர்கள் நகம் வெட்டாதவர்களையும் ஒழுங்காகப் பல்துலக்காதவர்களையும் வீட்டிற்கு அனுப்புவார். அங்கு பற்பொடியும், பிளேட்டும் இருக்கும். மாணவர்கள் விளையாட்டைக் கொண்டு பற்துலக்கியும், நகம் வெட்டியும் சுத்தஞ் செய்து கொண்டு வகுப்பறைக்குச் செல்லவேண்டும்.

பிரித்தானிய நிறுவனத்தின் சாக்குப் பைதான் பாடசாலைப் பையாக மாறி புத்தகம், அப்பியாசக் கொப்பி, சுவடிகள் ஆகியவற்றை உள்வாங்கி மாணவ மாணவியரது முதுகுகளில் தொங்கிக் கொண்டிருக்கும். ஆண்கள் சட்டையின்றி வெறுஞ் சாரத்துடன் மட்டுமே பாடசாலை சென்றனர். மன்னாரிலிருந்து இடம்மாற்றலாகி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. மரியதாசன் மாஸ்டரின் மகனும் இம்மாந்தை ஆஸ்பத்திரி டாக்டர் திரு.இராசலிங்கம் (RMO) அவர்களின் மகனும் அப்போது காரைநகர் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தவரும் பின்னர் பாலமோட்டை உபதபாலதிபராகக் கடமையாற்றி இடம்மாறி மருதங்குளத்தில் குடியேறியவருமான திரு.சோமசேகரம் அவர்களின் தம்பி திரு.க.சோமசேகரம் அவர்களுமாக மூவர் மட்டுமே மேற்சட்டை அணிந்து வருவர். நாமெல்லோரும் மேற்சட்டையின்றி சாரத்தோடு மட்டுமே பாடசாலை சென்று வருவோம். அதிபரின் இடைவிடாத தூண்டுதல் காரணமாக மெல்ல மெல்ல விருப்பமில்லாமலே பெற்றோர் தம் பிள்ளைகளைச் சட்டையணிய உதவினார்கள். பின்னர் அரைக்காற்சட்டை அணியச் செய்வதற்காக தோன்றியது. "எங்கட பிள்ளையள் உத்தியோகம் பார்க்க இல்லை உத்தியோகத்தர் தான் காற்சட்டை மேற்சட்டை போடுவினம் சின்னஞ் சிறுகள் ஒன்றுக்கு இரண்டுக்குப் போற தெண்டால் என்ன செய்விணம்" என்று பெற்றோர் தரப்பில் கருத்து முன்வைக்கப்பட்ட போது நிலைமையை விளக்கிய தோடு ஒரிரு வாரங்கள் தாமே நீளம் காற்சட்டை அணிந்தும் மாணவர்களை ஊக்குவித்தார். சிலமாதங்கள் செல்ல இம்முயற்சிபோது அதிபர் இன்னொரு சீர்திருத்தத்தைச் செய்யமுயன்றார். பெண்பிள்ளைகள் தாவணி போட வேண்டும். ஆண்கள் தோடுகளைக் கழற்றி வீட்டில் வைக்க வேண்டு மெனவும் அறிவித்தார்.

இதுவும் பெரிய எதிர்ப்பை எதிர்நோக்கியது. பரம்பரை பரம்பரையாகப் போட்டுவந்த தோட்டை, எங்கள் இறைவன் சிவபெருமானே தோடுடைய செவியனாக இருக்க எங்கள் பிள்ளைகளைத்தோடு போட வேண்டாமென இவர் கூறலாமா எனக் கொதித்தனர். பெற்றோர் அவர்களது கோபவேசத்தைத் தணிந்து வளர்ந்த நிலையை மெல்ல மெல்லமாகவே வெற்றி கண்டார். அதன்பின்னரே இன்று காணும் மாணவ வடிவம் எங்களிடம் காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆசிரியர் வளங்களைக் கூட்டுவதிலும் தேவையான இட வசதி வழங்கப் புதிய கட்டடங்களை அமைப்பதிலும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதிலும் கவனஞ் செலுத்தினார். பாடசாலைக்கு வந்த பாடத் தொடக்கம் ஆங்கில ஆசிரியர் ஒருவர் நியமிக்கப் பட வேண்டுமென வாதாடி 1952 இறுதியில் திரு.ஆர்.கந்தசாமிப்பிள்ளை என்பவர் ஆங்கில உதவி ஆசிரியராக நியமனம் பெற்று வந்து ஒருசில மாதங்களில் வேறு பதவி பெற்றுச் செல்ல 1953ல் கோப்பாயைச் சேர்ந்த எஸ்.குமாரத்தினம் அவர்கள் வந்த பின்னர்தான் ஆங்கிலம் அப்போதிலிருந்து ஒழுங்காகக் கற்பிக்கப்பட்டு வந்தது. 1956ல் அவரும் இடமாற்றம் பெற்றுச் செல்ல செல்வி மேரி மேரியோ மாரியாம்பிள்ளை ஆங்கில ஆசிரியையாக இங்கு வந்து 1957ல் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு ஒரு மாணவனைத் தயார் செய்து, அம்மாணவர் கல்லூரியின் சரித்திரத்தில் எஸ்.எஸ்.சி (தற்போதைய க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தையும் ஒருபாடமாக எடுத்துச் சித்திபெற்று வைத்தார். அதிபரின் தூண்டுதலும் ஆங்கில ஆசிரியையின் தனிப்பட்ட அக்கறையுமே மிகக் குறுகிய காலத்தில் ஆங்கில பாடத்தில் ஒரு மாணவனை சித்தியடையத் தூண்டியது. பாடவிதானத்தைத் தவிர வெளியாரினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கும் மாணவர்களைப் பயிற்றுவிக்கும் அதிபரின் திறமையால் அகில இலங்கை சைவ சமய பாடப் பரீட்சையில் 1953ல் கீழ்ப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடமும் 1954ல் மத்திய பிரிவில் மூன்றாவது இடமும் 1956ல் வித்தியாசாலைப் பரிசிலும் 1957ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேற்றிலில் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கத்தையும் இக்கல்லூரி பெற்றுக்கொண்டது. அதிபர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் அவரால் ஊட்டப்பட்ட கல்வியாலேயே இப்பரிசில்களை மாணவர் பெற்றுப் பாட சாலைக்குப் பெருமை சேர்த்தனர். பிரபல சட்டத்தரணியான சுவாமி நாதர் அவர்களது முருங்கைத் தோட்டமாக இருந்த 2 1/2 ஏக்கர் காணியைப் பெற்றுத் திருத்தி விளையாட்டிட மொன்று அமைத்து விளையாட்டுத் திறமை வளர வழிவகுத்தார். மாவட்ட மட்டத்திலும் பல போட்டிகளிற் பங்கு பற்றி பாடசாலைக்கு நல்ல மதிப்பைத் தேடிக் கொடுத்தனர். பாடசாலையில் நாவலர், விவேகானந்தர், மகாத்மா என்றும் 3 இல்லங்கள் உருவாக்கப்பட்டு இல்ல விளையாட்டுப் போட்டி ஆண்டுதோறும் நடந்து வந்தது.

திரு.எஸ்.குணரத்தினம் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் அதிபருடைய கலைவிருத்திக்கான பேரார்வத்தைப் புரிந்து கொண்ட இவர் பொருத்தமான வர்களை வருவித்து நாட்டியம், நாடகம், பாடல் போன்ற பல்வேறு கலைவடிவங்களைப் படைத்து மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிப் பாடசாலைக்குப் புகழ்சேர்த்த வராக மிளிர்ந்தார். இவருடைய நெறியாள்கையில் உருவான மயில் நடனம், கர்ணன் நாடகம் போன்றவை இமுந்தையில் மட்டுமன்றி வவுனியாவிலும் பல்வேறு மேடைகளை அணி செய்தன. போட்டிகளில் வெற்றியீட்டிப் பரிசில்களைத் தூக்கிக் கொண்டு வந்தன. பல்வேறு கோலாட்ட நிகழ்வுகளோடு மட்டக்களப்பிலிருந்து வந்து கற்பித்த திரு.காசுபதி கனகரத்தினம் அவர்கள் மட்டக்களப்பில் பிரபலமாக விளங்கும் பல்வேறு வசந்தன் நிகழ்வுகளையும் இங்கு கற்பித்து இக்கல்லூரியின் கலை வளர்ச்சிக்கு உதவினார்.


அதிபரின் கடமையுணர்வோடு கூடிய கண்டிப்பும், கட்டுப்பாட்டொழுக்கமும், பக்கஞ் சாராத தன்மையும், மாணவர்களின் வளர்ச்சியில் காட்டும் அக்கறையும் மாண வர்களைப் பணியச் செய்தது மட்டுமல்ல, பெற்றோரையும் பயமறியாத பெருமை அதிபருக்குப் பெற்றுத்தந்தன.

இவரது காலத்தில் மாணவர் தொகை 175 ஆக அதிகரிக்கப்பட்டது. ஆங்கிலம், விஞ்ஞானம், சங்கீதம் போன்ற விசேட துறை ஆசிரியர்களோடு 17பேர் ஆசிரியர்க ளாகக் கடமையாற்றினர்.

மாணவர் தேர்ச்சிச் சங்கம் என ஆரம்பித்துப் பின்னர் மாணாக்கர் இலக்கிய மன்றம் எனப் பெயர் மாற்றஞ் செய்யப்பட்டிருந்த மன்றத்தினூடாக பேச்சு, பாட்டு, கவிதை, நாடக நாடகம் போன்ற நிகழ்வுகள் மாதத்துக்கிருமுறை

அரங்கேற்றப்பட்டன. இச்சங்கத்தின் சார்பாக "ஓமந்தை மாணவன்" என்னும் பெயர் கொண்ட கையெழுத்துப் பத்திரிகையொன்றும் மாதமிருமுறை வெளியிடப்பட்டது. இதில் மாணவர்களது ஆக்கங்கள் இடம்பெற்றன. இவ்வாக்கங்கள் அந்தந்த வகுப்பு ஆசிரியர்களால் பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னரே வெளியிடப்பட்டன. இதன் ஆரம்பகாலத் தொடக்கம் சில ஆண்டுகள் பத்திரிகாசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது.

இவரது காலத்தில், கிடைக்கப்பெற்ற பற்றாக்குறை வளங்களைப் பயன்படுத்தி, பாடசாலையைப் பலதுறைகளிலும் முன்னணி வகிக்கச் செய்த பெருமை அதிபர் திரு.சிவலிங்கம் அவர்களையும், அவரது அன்புகலந்த கண்டிப்பான வழிகாட்டலில் செயற்பட்ட உதவி ஆசிரியர்கள் அனைவருக்கும் உரியது. இவ்வாறு பாடசாலை தொடர்பான பல்துறை வளர்ச்சி, ஆசிரியர், மாணவர்களுடனான புரிந்துணர்வோடு கூடிய நல்லுறவு என்பவற்றோடு பெற்றோருடனும் திணைக்கள அதிகாரிகளுடனும் சுமுகமான நல்லுறவைப் பேணிவந்தமை அவரது உயர்வான பொதுச் சிந்தனை வெற்றியுடன் நிறைவேற்ற உதவியது. இவரது காலத்தில் 1958ல் பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.




இவரது தேவைகளையும் கடமையுணர்வையும் கண்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சி.சுந்தரலிங்கம் அவர்கள் பாடசாலையின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சிக்கும் அதிபரின் வலக்கரமாக விளங்கி உதவினார்.

இவ்வாறு அதிபர், சிவலிங்கம் அவர்கள் ஆற்றிய தொண்டும் செய்த சமூக சீர்திருத்தங்களும் எமது பாடசாலையின் வளர்ச்சிப் பாதையிலே என்றும் நினைவில் நிலைத்திருக்கும் மைல் கல்லாக விளங்கிக் கொண்டே இருக்கும்.

அடுத்து எம் நினைவுகளிலே பசுமையாக இடம் பெறுபவர் கொக்குவிலைச் சேர்ந்த அதிபர் திரு.சி.கந்தையா அவர்களாகும். திரு.சிவலிங்கம் அவர்கள் 01.05.68ல் இடமாற்றம் பெற்றுக் கொழும்பு சென்ற பின்னர் சிலகாலம் இப்பாடசாலை வளர்ச்சியில் தேக்கநிலைக் காணப்பட்டது. 01.01.1981 தொடக்கம் திரு.கந்தையா அவர்கள் அதிபராக வந்த நாள் தொடக்கம் மீண்டும் பாடசாலை சகல துறைகளிலும் பிரகாசிக்கத் தொடங்கியது. மாணவர் தொகை அதிகரித்ததோடு பல புதிய மாணவர் நிரந்தர பாடசாலை அனுமதி கிடைக்கப் பெற்றுப் பலர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பரீட்சையில் சித்திபெய்தி வெவ்வேறு பதவிகள் பெற்றுச் சென்றுள்ளனர்.

தூர இடங்களிலிருந்து வருகைத் தருகின்ற மாணவர் நலனில் அக்கறை கொண்டு மாணவர் விடுதியை நலன் விரும்பிகளது நிதியுதவியுடன் ஆரம்பித்து திணைக்களத்தின் நிதியுதவியைப் பெற்று நிறைவு செய்தார். இரவும் பகலும் பாடசாலையின் வளர்ச்சி பற்றிச் சிந்தித்துச் செயலாற்றிப் பாடசாலையை வளர்த்த பெருந்தகை இவர்.

பெற்றோருடன் நண்பனாக, சகோதரனாக, உறவினனாக விளங்கி அவர்களோடு அந்நியோன்யமாகப் பழகியவர். பெற்றோரின் அன்பையும் ஒத்துழைப்பையும் முழுமையாகப் பெற்றுப் பாடசாலையை வளர்த்தெடுத்தவர். கல்வித் திணைக்களச் செல்வாக்கும் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.தா.சிவசிதம்பரம் அவர்களது அரவணைப்பும் பாடசாலை வளர்ச்சிக்கு நன்கு பயன்படச் செய்தவர். அதிபர் அவர்கள் மாணவர் தொகையையும் அதிகரித்து 15 ஆசிரியர்களாக ஆசிரியர் எண்ணிக்கையும் அதிகரித்தார்.

இவரது ஏழாண்டுகாலச் சேவை இக்கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் மற்றொரு மைல்கல்லாக விளங்கியதெனில் மிகையாகாது.

பாடசாலையின் தரத்தைக் குறையவிடாமற் செயற்பட்டார்கள். 01.03.73 தொடக்கம் முதலில் மூன்று வருடங்களும், பின்னர் 01.01.78 தொடக்கம் பன்னிரண்டு வருடங்களுமாக மொத்தம் 15 வருடங்கள் இக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றித் தனது முத்திரையைப் பொறித்தவர் இவர். பாடசாலையிலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் நொச்சிமோட்டை என்னும் கிராமம் இவரது பிறப்பிடமும் வாழ்விடமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமடு நூல் வெளியீட்டு விழாவில்...



2011 ப.சசிவர்ணன் புலமைப்பரிசு விழாவில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா.சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை நிகழ்வில்...



பேரா.ப.சந்திரசேகரம் நூல் வெளியீட்டு விழாவில்...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேரா.ச.முத்துலிங்கம் நூல் வெளியீட்டு விழாவில்...



சேமமடு நூல்கள் 50 அறிமுக விழாவில்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியில்...



2011 சர்வதேச புத்தகக் கண்காட்சி - சேமமடு அரங்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பிரதேசத்திலிருக்கும் பாடசாலையை வளப்படுத்த வேண்டும் மாணவர்களது கல்வியை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென்னும் இலட்சிய வேட்கையுடன் பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர் அவர்கள் இயன்ற வரை முயன்று ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் கண்டார். க.பொ.த உயர்தர வகுப்பில் சித்தியெய்திய பலர் முன்பு இருந்தபோதும், பல்கலைக் கழகத்துக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. சேவை மனப்பான்மை கொண்ட நல்லதொரு ஆசிரிய குழுவினைப் பெற்றிருந்த திரு.லோகசிங்கம் அதிபர் அவர்கள் இவ்வாசிரியர்களை உற்சாகப்படுத்தி அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய சூழலை ஆக்கி வைத்த தனால் ஆசிரியர்களது முழுமையான கல்விச் செயற்பாடு கிடைக்கப் பெற்ற 1975 தொடக்கம் 1980ஆம் ஆண்டு முடியும் வரை ஒவ்வோராண்டும் பலரை [illegible] பல்கலைக்கழகம், உயர்தரம், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை போன்றவற்றில் சிறப்புச் சித்தியெய்தி மாவட்ட மட்டத்தில் சிறப்பாக அமைந்ததோடு விளையாட்டுத் துறையில் அகில இலங்கை மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் பரிசில்களைத் தட்டிக் கொண்டமை பாராட்டத்தக்கதொன்றாகும்.

1975ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஓமந்தை இறம்பைக் குளத்தைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியம் கமலானந்த குமார் இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகஞ் சென்ற முதலாவது மாணவன் என்ற வரலாற்றைப் படைத்தார். இவர் பிற்காலத்தில் இப்பாடசாலையின் சிறப்புமிக்க அதிபர்களுள் ஒருவராக விளங்கினார். இவரைத் தொடர்ந்து பல்கலைக்கழகஞ் சென்றவர்களுள் தற்போது அவுஸ்திரேலிய பல்கலைக்கழக மொன்றில் பேராசிரியராக பணியாற்றும் கலாநிதி முருகர் குணசிங்கம், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் (முன்பு செல்வி அமிர்தரட்ணம் சிவானசி சரோஜினி தேவி), வவுனியா கச்சேரியில் சமுர்த்தி பிரதி ஆணையாளராகக் கடமையாற்றும் திரு. சிதம்பரப்பிள்ளை சபாலிங்கம், முன்பு பொதுநிர்வாக அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகக் கடமையாற்றி தற்போது வெளி விவகார அமைச்சில் பணிபுரியும் திரு.அருளம்பலம் விமலேந்திரராசா, கொழும்பு தேசிய வைத்தியசாலை மகப்பேற்று சிகிச்சை நிலையத்தில் வைத்திய நிபுணராகக் கடமையாற்றும் வைத்திய கலாநிதி ஜெயானினி ஜெயராசசிங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் கோபாலகிருஷ்ண பிள்ளை யோகேசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இன்னும் பலர் ஆசிரியர்களாக, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களாக அபிவிருத்தி உதவியாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.



இதைவிட தனியார் வியாபாரத் துறையிலும் போற்றத்தக்கவாறு சிலர் உயர்ந்துள்ளனர். குறிப்பாக லோகேஸ்வரன் (கொழும்பு) குணரத்தினம் (லண்டன்) பத்மசீலன் (கொழும்பு) சிவகுமார் (ஜேர்மனி) ரவி (லண்டன்) விஜேந்திரரத்தினம் (வவுனியா) போன்றோரை குறிப்பிடலாம். சேமமடு பொ.பத்மசீலன் ஈழத்து தமிழ் பதிப்புலக முன்னோடிகளில் ஒருவராக களம் காத்திரமாக இயங்கி வருகின்றார். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் வழிவந்த பதிப்புச் செயற்பாட்டை மீண்டும் புத்தாக்கமாக நவீன தன்மைகளுடன் முன்னெடுப்பதில் சேமமடு வெளியீட்டகம் முந் தள் இருப்பது எமக்கும் ஊருக்கும் பெருமை தரக்கூடியதாகும்.

இவ்வாறு கூடிய கவனமெடுத்து கல்வியின் பெறுபேற்றினை இலக்காக வைத்துச் செயற்பட்ட இவரது காலத்தில் வவுனியா மாவட்டத்தில் முதல் மட்டத்தைக் கண்ட முதல் பாடசாலையாக இது விளங்கியது. மத்திய கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்ட பாடசாலையின் வரலாற்றில் இந்த அதிபரின் காலம் மறுமலர்ச்சிக்காலம் எனக் குறிப்பிடத்தக்கது.

இவரைத் தொடர்ந்து திரு.க.கமலானந்த குமார் அதிபராகக் கடமையேற்ற சொற்ப காலத்தில் பல சவால்களைச் சந்தித்தார். 1990 ஜூன் மாதத்தில் ஏற்பட்ட கலவரம் காரணமாக ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர் முதலியோர் இடம்பெயர்ந்தபோது தீரத்துடன் நின்று பாடசாலையைக் கட்டிவளர்த்து 1000க்கு மேற்பட்ட மாணவர்களையும் 80 ஆசிரியர்கள் திட்டத்தையும் நிறைவேற்றிய காப்பாற்றிய பெருமைக்குரியவராவார்.

உயர்தரம் 5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை போன்றவற்றில் சிறப்புச் சித்தியெய்தி மாவட்ட மட்டத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்பாக அமைந்ததோடு விளையாட்டுத் துறையில் அகில இலங்கை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் பல பரிசில்களைத் தட்டிக் கொண்டமை பாராட்டத்தக்கதொன்றாகும். இவர் இவ்வுலக வாழ்வைத் துறக்கும் வரை (25.05.1984) பாடசாலை வளர்ச்சிக்காகப் பாடுபட்டுழைத்த பெருமகனார்.

இவரைத் தொடர்ந்து சிலர் அதிபர்களாக இருந்து பாடசாலையை நிலைகுலையவிடாது காத்து வந்தனர். 1990இல் நிகழ்ந்த இடப்பெயர்வு இடையூறு நடவடிக்கையால் பாடசாலை இடம்பெயர்ந்து வசதி வாய்ப்புக்களற்ற கோயில் குஞ்சுக்குளத்தில் பாடசாலை இயங்கியபோதும் அயராது உழைத்த ஆசிரியப் பெருமக்களால் மாணவர்களுக்கான கல்வி தொடரப்பட்டது. ஓமந்தை மத்திய கல்லூரியின் பழைய மாணவனான திரு.பூத்ததம்பி அரசரத்தினம் அவர்கள் 11.03.1999 தொடக்கம் அதிபராகக் கடமையேற்று மிகவும் கஷ்டமான காலத்திலும் இப்பாடசாலையை முன்னோக்கி நடைபயிலச் செய்து பாடசாலையை இயக்கி வந்தார்.

2008இல் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையில் இவர் பாடசாலையை மீண்டும் ஓமந்தைக்குக் கொண்டு வந்ததோடு மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடம், கணினிக் கற்கை நிலையம், உடைந்திருந்த மாணவர் விடுதியை முற்றிலும் புதியதாகக் கட்டிப் பொலிவடையச் செய்ததோடு பாடசாலை வளாகத்தின் எல்லை மதில்களையும் கட்டி பாடசாலைப் பௌதிக வளங்களை மேம்பாடடையச் செய்தமை அதிபரின் அதி உன்னத சேவையின் வெளிப்பாடே எனலாம்.

எமது கல்லூரியானது தொடர்ந்து கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டியதோடு விளையாட்டுத் துறையிலும் வளர்ச்சியடைந்தது. 2009இல் மாவட்ட, மாகாண மட்டத்தில் பரிசில்களைப் பெற்றதோடு தேசிய மட்டத்திற்கும் இருவர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆண்கள் சாரணியம், பெண்கள் சாரணியம், குருளைச் சாரணியம் என மூன்று பிரிவுகளையும் கொண்ட கல்லூரியாக இது விளங்குவதோடு 2009இல் ஆண்கள் சாரணர்களுள் ஒரு மாணவன் புலமைப்பரிசில் பெற்று இந்தியாவுக்குச் சென்று மீண்டார். 2010இல் வட மாகாணத்திலேயே முதன்முறையாக பெண்கள் சாரணியத்தைச் சேர்ந்த மாணவியொருவர் தென்கொரியா நாட்டுக்குச் சென்று ஜனாதிபதி விருது பெற்றார்.

அதிலே, சாரணர் இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளையும் கொண்டு உன்னத வளர்ச்சி கண்ட கல்லூரி பல இளைஞர்களுக்கு மத்தியிலும் கல்வியிலும் கலைகளிலும் சிறந்து விளங்கி இவ்வாண்டில் 2011ல் நூறாண்டுகளை நிறைவு செய்து உயர்ந்து நிற்கிறது.

எமது அன்னையாம் கல்லூரியின் வளர்ச்சிகண்டு உள்ளம் பூரித்து நிற்கும் அதேவேளையில் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையிலே அர்ப்பணிப்புடன் பயணித்துத் தடம் பதித்த பெருந்தகைகளை நெஞ்சார வாழ்த்தி வணங்கிப் பணிந்து மகிழ்வோம்.

க.ஜெயம்பிள்ளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] தமிழ்ச் சங்கம் நூலகம்

# பத்மம் பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்






நூலாசிரியர்: [illegible]

| | | |
|---|---|---|
| பூதம் காத்த புதையல்<br>விலை: 140.00 | நரிமேளம்<br>விலை: 160.00 | [illegible]<br>விலை: 140.00 |




அமரர் வி. அரியநாயகம் அவர்களின் புனைவுகள் தனித்துவமானவை. கதையுரைக்கும் நீண்ட மரபினதும் கற்பித்தல் நெடுவழியின் பரிமாணங்களதும் அனுபவப் பதிவுகளைத் தாங்கியவையாக அவரது ஆக்கங்கள் முகிழ்த்துக் கொண்டுள்ளன. கற்பித்தலும் கதை சொல்லலும் கதைக்கனிகளிலே ஒன்றிணைந்து சங்கமிக்கின்றன. கற்பித்தலின் பரிமாணங்களுள் ஒன்றாகிய உளவியலும் கதைகளிலே உட்புகுந்துள்ளது. சிறப்பாக அறிகை உளவியல், மானிட உளவியல் முதலியவற்றின் அசைவுகள் கதைகளிலே விரவியுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| நூலாசிரியர் | : வி.அரியநாயகம் | வெளியீடு | : [illegible] |
| பக்கம் | : 124 | விலை | : 240.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.சிவலிங்கராஜா

# கந்தபுராணச் சுருக்கம்

கந்தபுராணத்தின் சில படலங்களுக்குச் சிறப்பான உரை கண்டவர்களான உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர், நல்லை வைத்தியலிங்கம் பிள்ளை, [illegible], வ.சிவராஜசிங்கம் முதலானோர் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள். கந்தபுராணம் முழுவதற்கும் உரை கண்ட சுப்பிரமணிய சாஸ்திரிகள், க.கணபதிப்பிள்ளை முதலானோரை விடுத்துக் கந்தபுராணத்தைப் பற்றிய ஆய்வு செய்ய முடியாது. இவர்கள் யாவரும் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள்.

கந்தபுராணம் தக்ஷகாண்டத்திற்குச் சிறப்பான உரையெழுதிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கந்தபுராணத்தைக் கற்பித்த பொன்னம்பலபிள்ளை, திருவாதவூரர் புராணத்திற்கு விருத்தியுரை கண்ட பாட்டுவில் ம.க.வேற்பிள்ளை முதலானோர் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள். வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையே நீண்ட நெடுங்காலமாகவே சமய, கல்வி, பண்பாட்டுத் தொடர்புகள் நிறையவே இருந்தன. வடமராட்சியிலே பிறந்து தென்மராட்சியைச் சேர்ந்த மட்டுவிலில் திருமணம் செய்த பண்டிதர் சிவலிங்கத்தின் புலமை வாழ்வு இந்த இரண்டு பிரதேசத்தினதும் புலமையூற்றாகவே காணப்படுகின்றது.

கந்தபுராணத்தின் சுவையை அனுபவிக்க விரும்புவோர் கச்சியப்பரின் பத்தாயிரத்திற்கும் அதிகமான செய்யுள்களைப் படித்து இடர்ப்படா வகையிலே கதைப் போக்கினையும் கதாபாத்திரங்களின் குணவியல்புகளையும், காண்ட ஒருமைப்பாட்டையும் பேணி இந் நூலைத் தந்திருக்கிறார். அதேவேளை கச்சியப்பரின் கருத்துநிலையையும் உள்வாங்கியமை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம். அச்சுக்கலை மெச்சத்தக்க வகையிலே வளர்ந்திருக்கும் இக்காலத்திலே வனப்புமிகு நூலாக இது வெளிவரவுள்ளமையை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.





இந்த நூல் கந்தபுராண ஆர்வலர்களுக்கு மிகுந்த பயனளிக்கக் கூடியது என்பதில் கருத்து வேறுபாடிருக்க முடியாது. இந்நூல் கந்தபுராண கலாசாரத்தின் மைற்கல்லாக நின்று எமது பண்பாட்டுப் பயணத்திற்குப் பாதைகாட்டும் என உறுதியாக நம்புகிறோம்.

| கந்தபுராணச் சுருக்கம் | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | பண்டிதர் செ.சிவலிங்கம் |
| பக்கம் | : | 264 |
| விலை | : | 400.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களை இணைக்கும் தேர்ப்பவனி உலா




மதுராவில் Jesuits இன் கட்டுப்பாட்டிலுள்ள கிறித்துவமானது உருவ வழிபாடாகவே உள்ளது. கோவில்களில் வழிபடும் கன்னிமரியாவின் உருவம் மற்றும் வாகனங்களின் அலங்கரிப்பு இவற்றைத் தவிர, இந்துக்களின் பழைய வழிபாடுகள் மற்றும் தேர்ப்பவனி உலா போன்றவற்றிலிருந்து எந்த மாற்றமும் இல்லை. அதே மந்திரங்கள், தாரைத் தப்பட்டைகள், அதே ராக்கெட் வெடி, மெழுகுவர்த்திகள் மற்றும் நீல நிற விளக்குகள், அதே போல சந்தனம், குங்குமம் பூசிக் கொண்டு ஆட்டம் போடுபவர்கள். (கயே 1859,35).


தமிழக மாநிலத்தில், இந்தியாவின் தென்கோடி முனையிலோ நிலைமைகள் எல்லாம் முற்றிலும் வேறுபக்கமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. சென்னையின் நெரிசல் நிறைந்த தெருக்களில் இந்தியாவில் உற்பத்தி செய்த கார்களும், புதிய பிரேக் அமைப்பையும், உலோகத்திலான சக்கரங்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்ட அந்தப் பழங்காலத் தேர்களும் சேர்ந்தே பவனி வருகின்றன.

தேர்ப் பவனி, உலா போன்ற இந்து பழங்காலக் கொண்டாட்டங்கள் புத்துயிர் பெற்றது இந்து மதத்தில் மட்டும் நடக்கவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அது ரோமன் கத்தோலிக்க சமூகத்தவரின் பண்பாட்டிற்குரிய அங்கமாகவும் உள்ளது. இது போன்ற கொண்டாட்டங்கள், அல்லது வழிபாட்டு வடிவங்கள், முந்தைய காலத்தைப் போலவே, இப்போதும் ஒரு சமூக எல்லையை ஆக்கிரமிப்பதாகவும், கடவுள்களின் நிர்ணயிக்க முடியாத வல்லமையை அறிவிப்பதாகவும் உள்ளன. பல்வேறு சமூகங்கள், நம்பிக்கைகள் இணையும் பொதுவெளியான தெருக்களில் அவை வரையும் ஒன்றிணைப்பதாக உள்ளன.

இந்த வகையில் பார்த்தால், தேர்ப்பவனி வரும் இந்த வெளியானது பல்வேறு மதத்தினரும் கலந்துறவாடும் ஒரு பொதுவெளியாகவே உள்ளது. இங்கு, எந்தவொரு கடவுளும், மதமும் தமக்கென எதையும் உரிமைக் கொண்டாட முடியாது. கொஞ்ச காலமாக மறக்கடிக்கப்பட்டு, மீண்டும் புத்துயிர் பெற்றுள்ள இந்தத் தேர்ப்பவனி உலாக்கள் தமிழகத்திலுள்ள பல்வேறு மதத்தினரும் புதியதொரு சிவில் சமூகத்திற்கான மதக்கோட்பாட்டை நோக்கி நகர்ந்திருப்பதைக் குறிப்பதாக இருக்கிறது. இத்தகைய நகர்வு இந்திய அளவில் வியாபித்துவருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து தேசியச் சொல்லாடலுக்குள் உறவாடுவதாகவும் உள்ளது.

மேலே நாம் குறிப்பிட்டுள்ள 19-ஆம் நூற்றாண்டு ரோமன் கத்தோலிக்கப் பாதிரியார்களின் விவரணைகள் இன்று நாம் காண்கிற கொண்டாட்டங்களை விளங்கிக் கொள்ள உதவும்படியாக உள்ளன.... சென்னையிலுள்ள பெசன்ட் நகரில் மரத்தாலான பல்லக்கில் அந்தக் கடற்கரைச்சாலையில் ஊர்வரும் வெள்ளை மற்றும் தங்க நிறத்திலான சேலை கட்டி அலங்கரிக்கப்பட்ட மேரியைக் காண ஆயிரக்கணக்கானோர் அலைமோதுவர். அருகிலுள்ள மகாலட்சுமி அம்மன் கோவிலில் உள்ளதைப் போலவே விலையுயர்ந்த பட்டாடையும், தங்க நகைகளும் அணிந்து மேரி காட்சியளிப்பாள். சாலை நெடுகிலும், ஒரே மாதிரி வடிவமைக்கப்பட்ட புனிதமேரி மற்றும் மகாலட்சுமியின் திருவுருவப் படங்களை விற்றுக்கொண்டிருப்பார்கள். இது புதிதாக அமைக்கப் பட்டுள்ள இந்த மாதாக் கோவிலையும், அம்மன் கோவிலையும் இணைப்பதாக உள்ளது.

வெறும் பெயர்களும், கடவுள்களின் உருவங்களும் மட்டும்தான் இந்த இந்துக் கோவில்களையும் கிறித்துவ ஆலயங்களையும் பிரித்துக் காட்டுவதாக உள்ளன. புதுக்கோட்டையில் ஆவூர் என்ற ஊரிலுள்ள பாதிரியார் அங்கு எடுக்கப்படும் தேர்ப் பவனி விழா ரோமில் உள்ள கிறித்துவத் தலைமைப் பீடத்திடமிருந்து விசேட அனுமதி பெற்று நடப்பதாகவும், அங்குள்ள தேர் 1802-இல் வடிவமைக்கப்பட்டதாகவும் கூறினார். சென்னையில் வேளாங்கண்ணி மாதாவுக்காகப் புதிதாக உருவாக்கப்பட்ட ஆலயத்திலுள்ள பாதிரியார் அங்குள்ள புனித மேரியின் பிறந்தநாள் பல்வேறு மதத்தைச் சார்ந்த பக்தர்களாலும் கொண்டாடப்படுகிறதெனப் பெருமையோடு கூறினார்.

இதுபோன்ற இந்து - கிறித்துவ வழிபாடுகளின் கலந்துறவாடல் அப்போதைய தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் ஆசிபெற்றே நடந்தது. குறிப்பாக, திருச்சிக்கு அருகிலுள்ள மணப்பாறையில் புனித தாமஸ் ஆலயத்திற்கான தேரின் மீது இருந்த பெண்ணின் வடிவிலான ஜெயலலிதாவின் உருவம் அமைக்கப்பட்டு, திருவிழாவின் "தேர்ப் பவனி"யை நிகழ்த்துவதற்கு அவர் உதவியதாகக் காட்டப்பட்டிருந்தது.

இது போன்ற கிறித்துவ "தேர்ப் பவனி விழாக் களை" தமிழகமெங்கும் தேர்களைப் புதுப்பித்துப் பவனிவிடும் ஆர்வம் மிகுந்துள்ளதோடு இணைத்துப் பார்க்க வேண்டும். மரத்தேர்கள் வீணாகிப் போன பல கோவில்களில் புதிய தேர்கள் வடிவமைக்கப்பட்டுத் தேர்த் திருவிழாக்கள் நடத்தப் புதிய ஆர்வம் பிறந்துள்ளதைப் பற்றி 1999-இல் *Frontline* பத்திரிகையில் விரிவான செய்தி வெளியானதையும் இதனோடு இணைத்துப் பார்க்கலாம்... இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், பல்வேறு கிறித்துவ பிரிவினர்கள் கூறுவதைப் போல இந்த இந்து - கிறித்துவ வழிபாட்டு இணைப்பு ஒரு பொதுவான மதநம்பிக்கைகளை முன்வைக்கவில்லை என்பதுதான். அதாவது, இந்தக் கொண்டாட்டங்களை மட்டும் வைத்துக் கொண்டு "இந்து" மதத்திற்குள் கிறித்துவர்கள் உள்ளிழுக்கப்பட்டு விட்டனர் எனக் கூறிவிட முடியாது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெசன்ட் நகரில் கொண்டாடப்படும் கன்னி மரியாளின் பிறந்தநாள் :**

பெசன்நகர் பகுதி சென்னைக் கரையோரத்தில் பரந்து விரிந்திருக்கிறது. 1970இல் புதியதாக உருவாக்கப் பட்ட, போக்குவரத்து வசதிகள்கூட இல்லாத இந்தப் பகுதிக்கு, நகரத்திலிருந்து வெகு தொலைவிலிருக்கும் நடுத்தரவர்க்கத்தினர் இடம்பெயர்ந்து வந்தனர். சுற்றியி ருக்கும் மீன்பிடி கிராமங்களில், மற்றவர்களை விரட்டிக் குடிபெயர்ந்தனர். நகரத்திற்கு அருகிலுள்ளதாகவும் நெருக்கம் நிறைந்ததாகவும் காணப்படும் அந்தப் பகுதிக்கு, பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்களும், பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் கவரப்பட்டனர். அதன் வடக்குப் புறம் தியோசாபிகல்சொஸைட்டியின் தலைமை இடத்தின் அகண்ட சுற்றுகள் இருக்கின்றன. அதன் வளாகத்திற்குள்தான் உலக மதங்கள் குறித்து ஆர்வம் கொண்டவர்களுக்கான ஆய்வு நூலகம் உள்ளது. அருகு அருகாமையில் உள்ள சாலை நெடுகிலும் இரண்டு மைல் தூரத்திற்கு அங்குள்ள பூர்வக் குடியினர் இருக்கின்றனர்.

இங்குக் கடற்கரைச் சந்திப்பில் சென்னையை நோக்கிச் செல்லும் சாலையில்தான், அன்னை வேளாங் கண்ணியின் ஆலயம் உள்ளது. இது, தஞ்சாவூர் மாவட்டத் தின் தெற்குக் கடற்கரையோரத்திலுள்ள 200 வருடம் சுற்றளவு கொண்ட, மிகப்பெரிய புகழ்பெற்ற ஆலயத்தின் ஒரு கிளை ஆகும். இதுபோன்ற புகழ்பெற்ற புனிதத் தலங்களை மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட பல கோயில்களை நகர்ப்புறங்களில் காணலாம். இந்த இடத்தில் வெளிநாட்டிலிருந்து அளிக்கப்பட்ட நிதி உதவியுடன், அசுரர்களை அழித்த முருகக் கடவுளைக் கொண்ட "அறுபடை வீடு" கோயிலும் கட்டப்பட்டுள் ளது. நம் அன்னை இருக்கும் கடற்கரைக்குச் சற்று அரு கில், மகாலட்சுமி கோயில், அம்மனின் ஒன்பது அவ தாரங்களையும் ஒரே இடத்தில் தரிசிக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது.

பெசன்ட் நகரிலுள்ள புனிதக் கன்னிமரியாளின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ரோமன் கத்தோலிக்கர்களின் படிநிலை எங்கும் வியாபித்துள்ளது. கிராமப்புறத் தேர்த் திருவிழாவானது, எப்போதும் உள்ளூர் போதகர்களாலேயே நடத்தப்படுகிறது. ஆனால், இங்குச் சென்னையினுடைய தலைமைப் போதகரால் இத்திருவிழா நடத்தப்படுகிறது. சிவப்பு நிற அங்கியும், வெள்ளை மற்றும் தங்க நிறத்தாலான சால்வையும் அணிந்து, அவர் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குத் தமி ழில் பிரார்த்தனை செய்து *Mass* (திருப்பலி) கொடுப்பார். பின்பு, தலைமைப் போதகர் மரியாளின் உருவத்தைத் தொடுக்கிற சமாதானத்தின் மரத்தாலான பல்லக்கின் முன்பாகப் பிரார்த்தனை செய்வார்.

மேலும், அவருடைய சிவப்பு நிற அங்கியும், அவருக்கு முன்பாக இருக்கும் கன்னிமரியாளின் புடவையின் நிறமும் ஒன்றாக இருக்கும். அந்த ஆலயப் போதகர் திருப்பலி கொடுப்பதற்கு முன்பு பாவ மன்னிப்பு அறையிலிருந்து பாவ மன்னிப்புகளைக் கேட்பார். கன்னியாஸ்திரிகள் மதச்சம்பந்தமான புத்தகங்களை விற்பனை செய்வார்கள். வேளாங்கண்ணியில் உள்ளதைப் போன்றே இங்கும் வழிபாடுகளில் சில முரண்களைக் காண முடிகிறது.


புதுக்கோட்டையிலுள்ள "ஆவூர்" கிராமத்தில் உள்ளதைவிட இந்து - கிறித்துவக் கலப்பு இங்கு அதிகமாகக் காணப்படுகிறது. இந்தத் திருவிழாவானது, அருகிலுள்ள அம்மன் கோயிலில் நடப்பதைப் போன்றே, வெள்ளை மற்றும் தங்கநிறமான நம் ஆரோக்கிய மாதாவின் முன் கொடியேற்றித் தொடங்கப்படும். இந்துத் திருவிழாக்களைப் போல, கொடிக்கம்பத்தைத் தொட்டு, பக்தர்கள் பழங்கால முறைமையின்படி மஞ்சள் தண்ணீ ரில் முழுக்கப்பட்ட தூயக் கயிறுகளைக் கம்பத்தைச் சுற்றிலும் கட்டி, இவ்விழாவின் முழுமையை வைத்திருப் பார்கள். மாதாவிற்குக் காணிக்கை செலுத்த நீண்ட வரிசையில் பக்தர்கள் நிற்பார்கள்.

கிறுத்தவர்களுக்குரிய மெழுகுவர்த்திகளுடன், இந்துக்கள் படைப்பதைப் போன்றே, பெரிய தட்டில் உடைக்கப்பட்ட தேங்காய், மல்லிகைப்பூ, வாழைப்பழம் ஆகியவை காணப்படுகின்றன. ஆனால், கற்பூரம், வெற்றிலைப் பாக்கு மற்றும் குங்குமம் இருக்காது. இளஞ் சிவப்பு ஆடை அணிந்து மடியில் தொப்பியின் உருவத் தையும், ஜெபமாலையையும் பிடித்துக்கொண்டு பெண் கள் மற்றும் ஆண்கள் வரிசையில் நிற்பதையும் நம்மால் பார்க்க முடியும். இவ்விடத்தின் போதகர், இந்துக்கள் இங்குத் தரிசிக்க வருவதைக் கண்டு தான் மிகவும் மகிழ்ச் சியடைவதாகக் கூறினார். அங்குப் பக்தர்கள் கிறுத்துவர் களா இல்லை, இந்துக்களா என்பதைச் சுலபமாகப் பிரித்துப் பார்க்க முடியவில்லை. இங்கு மத அடையாள மானது, ஒரு பொருட்டாகவே இல்லை.

பெசன்ட் நகரில் நடக்கும் பிறந்தநாள் கொண்டாட் டத்தில் நம் ஆரோக்கிய மாதா ஆடம்பரமான தேரில் உலாவருவதில்லை. கவனமாகச் செதுக்கப்பட்ட, சரிகை சுற்றிய சிறுமையுடன், அலங்கரிக்கப்பட்ட மரத்தாலான பல்லக்கில் மரியாள் உலா வருகிறாள். அந்தப் பல்லக் கானது, அருகிலுள்ள ஆலய வடிவத்தைக் கொண்டுள் ளது. ஆலயத்தைப் போலவே, அதன் இருபக்கங்களும் முக்கோண வடிவத்தைக் கொண்டுள்ளது. மரக்கட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் செய்யப்பட்ட சுருக்கப்பட்ட ஆலய வடிவம் போன்று இது காணப்பட்டாலும், புகழ்பெற்ற கட்டடக்கலையின் பிரதிபலிப்பை இது காட்டுகிறது. இதன் உருவ அமைப்பு கிறித்துவர்களுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், அங்குள்ள உள்ள தேரை விட, இது நுண்ணியமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர் பெரிய கதவுகளைக் கொண்ட கோபுர வடிவத்தைத் தாங்கி உள்ளூர் (இந்து) கடவுள் இருக்கும் கோயில் போல அமைக்கப்பட்டுள்ளது. சொல்லப்போனால், இவையாவும் நடமாடும் கலை பொக்கிஷங்களாகவே உள்ளன. (மைக்கேல் 1992,35)

அருகிலுள்ள இந்துக் கோவிலில் உள்ளதைப் போன்றே, பெசன்ட் நகர் ஆலயத்திலும், ஊர்வலத்துக்காகவே ஒரு மாதா உருவம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்துக்களைப் போலவே, இந்த மாதாவுக்குச் செய்யப்படும் ஆடை அலங்காரத்தைக் கிறித்துவர்கள் பக்தியுடன் தரிசிக்கின்றனர். ஆலய உறுப்பினர்களில் தங்கக் கோலையும், புனித உருவத்தையும், அதிக எடையுள்ள பல்லக்கின் கிரீடத்தையும் சுமப்பதற்காக மூன்று நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு நபர்கள், வெண்மை மற்றும் தங்கத்தாலான புடவை அணிந்து, குழந்தை இயேசுவைத் தன் கரங்களில் ஏந்தி, சிவப்பு மற்றும் தங்க நிறத்தாலான கிரீடத்தைத் தன் தலையிலும், மற்றொரு கிரீடத்தைத் தன் குழந்தையின் தலையிலும் வைத்திருக்கும் மரியாளின் உருவத்தைச் சுமக்கின்றனர். அலங்காரம் செய்யும் நபர் மாதாவின் கைகளில் செங்கோலை வைப்பார்.

மேலும் தலைமைப் போதகர், மரியாளின் கழுத்தில் தாலியைக் கட்டுவார். குழந்தை இயேசுவின் கழுத்திலும், மரியாளின் கழுத்திலும் மரகதக் கல்மாலை ஆபரணத்தைச் சூட்டுவார். தாலிகட்டும் சடங்கானது அவர்களுடைய பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. இப்படியாக, உலகத்தின் அன்னையானவள், பெசன்ட் நகரிலுள்ள தன் பக்தர்கள் தரிசிக்கும்படி, தமிழ் அன்னையின் எல்லா அடையாளங்களையும் பெறுகிறாள். அங்குள்ள இந்துப் பக்தர்களுக்கு, அவள் தேவியாகவும், கிறித்தவப் பக்தர்களுக்கு அவள் புனித அன்னையாகவும் காட்சி தருகிறாள். பாரம்பரிய கிறித்துவக் கத்தோலிக்கக் குறியீடுகளும், இந்து மதக் குறியீடுகளும் இத்திருவிழா முழுவதும் நிறைந்துள்ளன. அந்தத் தேர்ப்பவனி விழா முன்வைக்கின்ற மொழியானது பல்வேறு மதங்களைச் சார்ந்த பக்தர்களின் மனதைக் கவரும்படி, அந்த நாள், அந்தப் பொழுது, அந்த இடத்திற்கான பரம்பொருளாக மட்டுமே உள்ளது.

*தமிழாக்கம்: ஷீலா ரேஸி Popular Christianity in India: Riding Between the lines. Ed.Selva.J.Raj & corinne G.Dempsey. State Univ. of New York press, 2002.*

*நன்றி: பக்தி அனுபவம் - அரசியல் - மாற்று பதிப்பகம்*

| | | |
|---|---|---|
| நூல் | : | பக்தி- அனுபவம் - அரசியல் |
| பதிப்பாசிரியர் | : | அ.மார்க்ஸ் |
| பக்கம் | : | 210 |
| விலை | : | 450.00 |
| வெளியீடு | : | மாற்று வெளியீடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியக் களஞ்சியம்



சமகாலத்தில் கலை இலக்கியம் தொடர்பான ஆய்வுகளின் பிரவாகம் புதிய புதிய கலைச் சொற்களினதும் கோட்பாடுகளினதும் ஆக்கங்களோடு இணைந்து எழுச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது. அவை பற்றிய அடிப்படையான அறிவு செறிவான விமரிசனங்களை முன்னெடுப்பதற்குரிய முன்நிபந்தனையாகின்றது. தெளிவான எண்ணக்கருக்களின் அடிப்படையிலேதான் கனங் காத்திரமான கலை இலக்கிய விமரிசனங்களை முன்னெடுக்க முடியும்.

பல்வேறுபட்ட மொழிகளும் பண்பாடுகளும் நெருங்கி வருகின்ற இற்றைக்காலத்தில் ஒப்பிலக்கியம், இலக்கிய விமரிசனம், மொழிபெயர்ப்பு முதலான புதிய துறைகள் தமிழில் விரிந்தும் பரந்தும் பெருகி வருகின்றன. பிறமொழி இலக்கியத்தின் தாக்கமும் செல்வாக்கும் இற்றைநாள் தமிழ் நூல்களில் காணக் கிடைக்கின்றன. வளர்ந்துவரும் இவற்றின் தேவைக் கேற்ப தமிழ் மொழியின் இலக்கியச் சொல்வளம் விரிவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் "கலை இலக்கியச் சொற்களஞ்சியம்" ஆக்கமாகின்றது.

நவீன கலை இலக்கியத்தில் பயின்றுவரும் பெரு வாரியான கலைச்சொற்கள் ஒருசேரத் தொகுக்கப்பட்டு நூல்வடிவில் தமிழில் வெளியிடும் முயற்சி பெருமளவு வரவில்லை. இருப்பினும் பேராசிரியர் வைசக்கிரானந்தம் "மேலை இலக்கியச் சொல்லகராதி" எனும் நூலை 1983இல் தமிழில் வெளியிட்டார். இதற்குப் பின்னர் தற்போது சபா.ஜெயராசா "கலை இலக்கியக் களஞ்சியம்" எனும் நூலைத் தருகின்றார்.

தமிழ்மொழியில் இவ்வாறான நூலாக்கம் தேக்கத்திலிருந்து மீண்டெழும் அறிகை விசையைத் தரவல்லது. கலை இலக்கிய மாணவர்களுக்கும் விமரிசகர்களுக்கும் உதவும் உசாத்துணை நூலாகவும் இந்த ஆக்கம் அமைக்கப்பட்டுள்ளது. கலைச்சொற்களின் விளக்கத்தின் பொருட்டு ஆங்கில எண்ணக்கருக்களும் இணைவாகத் தரப்பட்டுள்ளமை நூலின் பயனுடைமையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

கலை இலக்கியங்களில் நிகழ்ந்துவரும் புதிய கருத்தாடல்களை புரிந்து கொள்வதற்குரிய ஆற்றுப்படுத்தல் ஆக்கமாகவும் இந்நூல் அமைந்துள்ளது. பொருத்தமான எடுத்துக்காட்டுக்கள் விளக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன.

தமிழியலின் வளர்ச்சிக்கு நெறிப்படுத்தும் இந்நூலாக்கம் வாசகரின் வாசிப்பு மட்டத்தை உயர்ந்த நிலைகளுக்கு உயர்த்திச் செல்வதற்கு உதவும் என்பது எமது நம்பிக்கை.

**கலை இலக்கியக் களஞ்சியம்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சபா.ஜெயராசா |
| பக்கம் | : | 132 |
| விலை | : | 340.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மாறன்

# குழந்தை உளவியலும் கல்வியும்




குழந்தை உளவியல், குழந்தைக் கல்வி, குழந்தை வளர்ப்பு முறை முதலாம் துறைகளிலே பரவலான ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. வளர்ந்த நிலையில் ஏற்படும் விலகல் நடத்தைகளுக்கும் இடர்களுக்கும் குழந்தை நிலை வளர்ப்பில் நிகழ்ந்த தவறான அணுகுமுறைகளும் ஆதரவு இன்மையுமே முக்கிய காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இன்று சிறுவர்க்குரிய கல்வியில் அழுத்தங்களும் திணிப்புகளும் மேற்கொள்ளப்படுவதால் எதிர்பாராத பின்விளைவுகள் வளர்ச்சிப் பருவத்தில் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

அதேவேளை முன்பள்ளிகளும் பெருமளவிலே கவனிப்பாரற்ற நிலையிலே இயங்கிய வண்ணமுள்ளன. அரசாங்கம் ஆரம்பக் கல்வியில் செலுத்தும் ஊன்றிய கவனம் போன்று முன்பள்ளிகளிலே செலுத்துதல் இல்லை. நாட்டம் கொள்வதுமில்லை.

மேற்கூறிய எதிர்மறையான சூழலிலே சிறார் பற்றிய தெளிந்த புலக்காட்சியை ஏற்படுத்துவதற்கும் முன்னேற்றகரமான அணுகுமுறைகளை முன்னெடுப்பதற்கும் பயனுள்ள ஆக்கமாக இந்நூல் அமைகின்றது. தமிழ் மரபுகளையும் உள்வாங்கிய அனைத்து விடயப் பரப்புக்களையும் உள்ளடக்கிய நூலாக இது கட்டமைப்புச் செய்யப்பட்டிருத்தலைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்கள் தாமாகக் கற்று தமது வாண்மையை மேம்படுத்திக் கொள்வதற்கும் பெற்றோர் உளவியல் நிலையிலே தமது பிள்ளைகளை அணுகி முழுநிறைவான வளர்ச்சியை அறிகை ஆட்சி, எழுச்சி ஆட்சி, உடலியக்க ஆட்சி ஆகிய துறைகளிலே ஈட்டிக் கொள்வதற்கும் இந்நூல் பயன்மிக்க ஆக்கமாகின்றது. சாதாரணமாக குழந்தை வளர்ப்பிலும் குழந்தைக் கல்வியிலும் அக்கறையுள்ளவர்களுக்கும் வழிகாட்டி நூலாகவும் அமைந்துள்ளது.

**குழந்தை உளவியலும் கல்வியும்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சபா.ஜெயராசா |
| பக்கம் | : | 194. |
| விலை | : | 400.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பார்வை

எச்.பீர்முஹம்மது

# புலம்பெயர் உலகில்

## ஓரியண்டலிசம் பற்றிய குறிப்புகள்

நடப்பு உலகில் மனித வாழ்க்கை நிலையற்று தப்பியலையும் விலங்காக நகர்ந்து வருகிறது. இரையைத் தேடும் பறவையும் இந்தப் புள்ளியில்தான் இணைகிறது. பறவைகள் இப்பிரபஞ்சத்தின் எல்லா வெளிகளையும் தொடுபவை. அவற்றுக்கு நிலையான இருப்பிடம் என்பது அபூர்வமே. நாளை பற்றிய கனவுகளற்று உணவுத் தேட்டமே அவற்றின் முதன்மைச் செயல்பாடு. இந்த இடத்தில் நாளை என்பதில்தான் மனிதன் பறவையிடமிருந்து வேறுபடுகிறான். இன்று என்பதில் அவன் இருப்பு தொடங்கி காலம் முன்னோக்கி நகர்தல் - பின்னோக்கி நகர்தல் என்ற இருத்தல் செயல்பாடுவரை அவனின் இயக்கம் இயங்குகிறது. நடப்பு உலகில் பல்வேறு காரணங்களுக்காக மனிதனின் இடப்பெயர்வு தேவையான ஒன்றாக மாறிவிட்டது. இருப்பிடம் தாண்டிய, பிரதேசம் தாண்டிய, மொழி தாண்டிய, பண்பாடு தாண்டிய, மனித உறவுகளைத் தாண்டிய ஒரு கடந்து போதலாக இடப்பெயர்வு இன்று மாறிவிட்டது.

உலக வரலாற்றில் அதிகமாக இந்தத் தாண்டலுக்கு உள்ளானவர்கள் மூன்றாம் உலக நாடுகள் அல்லது வளரும் நாடுகளைச் சார்ந்த அதரவற்ற மனிதர்களே. இருபதாம் நூற்றாண்டை இந்தப் புலப்பெயர்வின் அதிகாரபூர்வக் காலகட்டம் எனலாம். உலக நாகரிகங்களின் காலகட்டத்திலிருந்து இது தொடங்கினாலும் இருபதாம் நூற்றாண்டில் இடம்பெயர்வு என்பது, வெகுவான, மிக அவலமான, துயரமான இடப்பெயர்வு *(Displacement)* எனும் பொருளைப் பெறுகிறது.

வரலாற்று அடிப்படையில் புவிக்கூறுபாட்டிற்கும், மனித இடப்பெயர்வுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. தேசியம், நாகரிகம் *(Nation, Civilization)* போன்ற கருத்தாக்கங்கள் தோன்றுதொட்ட மனித இடப்பெயர்வின் விளைவுகளே என்கிறார் இத்தாலியத் தத்துவவாதியான விக்கோ. இதில் தேசியம் நடப்பு உலகில் மிகுந்த குவிய மையந்து வருகிறது. கொசாவோ தொடங்கி இலங்கை வரை இதன் உணர்வு விரிந்து பரவுகிறது. உலக வரலாற்றில் மனிதர்கள் இரக்கங்களைவிடத் தங்கள் தேசத்திற்கான போராட்டத்திற்காகவே அதிகமும் உயிரிழந்திருக்கிறார்கள். மனித வரலாற்று வளர்ச்சிப் போக்கைக் கூர்ந்து கவனித்தவர்கள் இதைப் புரிந்துகொள்ள முடியும். இதனை இன்னொரு பொருளில் நாம் விவரித்தால் இப்பிரபஞ்சம் புவி அரசியல் - பண்பாட்டு ரீதியாக மேற்கு - கிழக்கு என்ற இரு பெரும் பிரிவினைக்கு உட்பட்டிருக்கிறது. மேற்கு என்பதில் ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற பெரும் கண்டங்கள் வருகின்றன. இதில் மேற்கு என்பதற்கு ஐரோப்பா என்பதாகவே பெரும்பாலும் இன்று பொருள் கொள்ளப்படுகிறது. அது புவியியல், பண்பாடு, அரசியல், மதம், அறம் ஆகிய கூறுகளின் தொகுப்பாகும்.

மேற்கின் அரசியல் வரலாற்றுக் கூறு என்பது நீண்டகால ஆதிக்கம், அதிகாரம், வன்செயல், கலாசாரப் (பண்பாட்டு) பறிப்பு இவற்றோடு இணைந்திருக்கிறது. இன்றைய கட்டத்தில் மேற்காக ஐரோப்பாவும், அமெரிக்காவும்தான் உலக அரங்கின் முன்னிலை பெறுகின்றன. இதைக் குறித்து பிரிட்டன் எழுத்தாளர் ஆஸ்கர் ஒயில்ட் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> "இரு தேசங்கள் ஒரு பொதுவான மொழியால் பிரிக்கப்பட்டுள்ளன. கீழைநாடுகளைப் பொறுத்த வரை மத்தியக் கிழக்கு, தெற்கு, கிழக்காசிய நாடுகளே குவியம் பெறுகின்றன. ஓரியண்ட் என்ற சொல்லாடல் மேற்கின் அகராதிப்படி கீழை நாடுகளைக் குறிப்பதாகும். அமெரிக்க வழக்கிலும் பிரிட்டன் வழக்கிலும் அது இன்றும் நகைப்புக்குரிய ஒன்றாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப்படுகிறது. இலத்தீன் மொழியில் ஓரியன்ஸ் என்பதற்குச் சூரியன் உதிக்கும் பிரதேசமாகும். மரபார்ந்த முறையில் மேற்கு ஐரோப்பிய வழக்கில் ஓரியண்ட் என்பதற்குத் தற்போது மத்தியக் கிழக்கு என்றழைக்கப்படும் பகுதி என்பதே பொருளாகும். அதாவது அண்மையிலுள்ள கிழக்கு நாடுகளைக் குறிப்பது. இதன் தொடர்ச்சியில் ஓரியண்ட் என்பது அந்நாடுகளின் மக்களையும் பண்பாடுகளையும் குறிப்பதாகும். பிரெஞ்சு வழக்கில் ஓரியண்ட் என்பது கிழக்கத்திய விவகாரம் சார்ந்த, உஸ்மானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிந்தைய அந்நாடுகளின் அரசியல் விவகாரங்கள், தூதரக விவகாரங்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும். ஓரியண்ட் சொல்லாடல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் ஐரோப்பாவில் பரவலாக வழக்கில் இருந்தது. மேலும் இது பிரிட்டனின் காலனிய, யூத எதிர்ப்பு மனோபாவம் ஆகியவற்றின் பின்தொடரலாகவும் இருந்தது. இதனிடையில் ஓரியண்ட் என்பது கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய செமிட்டிக் மதங்களின் பண்பாட்டு, பிராந்திய, கருத்தியல் நிலைப்பாடுகளின் பிரிவினை சார்ந்த கூறாகவும் இருக்கிறது."

நாம் இன்று மேற்கு என்று புரிந்துகொள்கிற பகுதியானது வரலாற்று ரீதியாக 600 ஆண்டுகள் பழமையானது. அன்று கிறிஸ்தவப் பிரதேசமாக அறியப்பட்டது. இது கத்தோலிக்க, புரொட்டஸ்டண்ட் கிறிஸ்தவம் ஆகியவற்றின் கூட்டிணைவே. இதில் வைதீக, பைசாண்டிய கிறிஸ்தவங்கள் உள்ளடங்காது. காரணம் அவை மத்திய கிழக்குப் பகுதிக்கு உட்பட்டவை.

மேற்கத்தியக் கிறிஸ்தவத்திற்கும் இதற்கும் பொதுவான மரபு இருந்தாலும் அவை அடிப்படையில் வேறுபட்டவை. மேற்கத்தியக் கிறிஸ்தவம் என்பது ரோமாபுரியைக் குவியப்படுத்தும் ஒன்றே. எட்டாம் நூற்றாண்டு பிராங்க் மன்னரான சார்லிமாக்னே அன்றைய போப் மூன்றாம் லியோவால் கி.பி.800இல் ரோமின் பேரரசனாக முடிசூட்டப்பட்டார். இதனைத் தொடர்ந்து மத்தியக் கிழக்கு இஸ்லாமிய உலகிற்கும் மேற்கத்திய கிறிஸ்தவத்துக்கும் இடையில் அரசியல், கலாசார மோதல்கள் தொடங்கின. 18ஆம் நூற்றாண்டிலும் 19ஆம் நூற்றாண்டிலும் மத்தியக் கிழக்கையும் ஐரோப்பாவின் அந்த அரசியப் பகுதிகளையும் ஆண்ட துருக்கிய உஸ்மானியப் பேரரசு அன்றைய ரோம கிறிஸ்தவ அரசுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் தோன்றியது. கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை அதன் அரசியல் வலிமை பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டில் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. 1648இல் மேற்கின் ஒவ்வொரு அரசும் அவரவருக்குரிய சொந்த மதங்களைப் பிரகடனப்படுத்தலாம் என்ற நிலை ஏற்பட்டது.

அதே காலகட்டத்தில் மேற்கத்தியக் கிறிஸ்தவத்தின் உயிர்நாடியான ரோமப் பேரரசு சரிவடைந்து புதிய இறையாண்மை மிக்க அரசுகள் ஏற்பட்டன. இந்தக் காலகட்டம்தான் ஐரோப்பிய வரலாற்றில் மறுமலர்ச்சி யுகம். இப்போது மதச்சார்பின்மைக் கருத்தியல் அதற்குள்ளிருந்து எழுந்து ஐரோப்பா முழுவதும் பரவுகிறது. ஜனநாயகம் பற்றிய கருத்தாக்கம் விரிவடைந்து அதனை உள்வாங்கிய அரசுகள் பிறக்கின்றன. இதன் தொடர்ச்சியில் உலகாயதத்தின் ஒரு பகுதியாக நவீன ஐரோப்பா உருவானது. இது ஐரோப்பாவின் பயண வரலாற்றாளர்கள் முக்கிய இடத்தை அடைகின்றனர். மார்க்கோபோலோ, மார்சல் பிரவுஸ்ட், மாக்கியவெல்லி, பாஹியான் போன்றோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். ஐரோப்பியர்கள் பலர் கீழை நாடுகளுக்குக் கடல்வழிப் பாதை கண்டறியும் முயற்சியில் இறங்கினர். அது ஒரு வகையில் அவர்களின் தீவிர அரசியலாகவும் இருந்தது. மார்சல் பிரவுஸ்ட் "உண்மையான கடல்வழி கண்டுபிடிப்பு என்பது நிலத்தைத் தேடுவதல்ல. மாறாகப் புதிய கண்கள் வழியாக அவற்றைப் பார்ப்பதுமாகும்" என்றார்.

ஓரியண்டலிசத்தைப் பொறுத்தவரை கிழக்கத்தியப் பண்பாட்டின் கூறுகள் பற்றிய வரைபடமாகவும், கண்ணோட்டமாகவும் இருக்கிறது. வரலாற்று அடிப்படையில் ஓரியண்டலிசம் 18, 19ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சு சிந்தனையாளர்கள், பயணக்குறிப்பாளர்கள் ஆகியோரின் ஆக்கங்களால் நிரம்பியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஓரியண்ட் என்பது மத்தியக் கிழக்கில் இருந்து நகர்ந்து தூர கிழக்கு நாடுகளைக் குறிப்பதாக மாறியது. குறிப்பாக ஜப்பான், சீனா போன்றவற்றைக் குறிப்பதானது. அதாவது கிழக்காசியா, மத்திய ஆசியா, தென்கிழக்காசியா ஆகிய புவி அரசியல் பகுதிகளைக் குறித்தது. தற்போதைய ஆங்கில அகராதிப் படி ஓரியண்ட் என்ற சொல்லுக்குக் கிழக்காசிய நாடுகளையும் தென்கிழக்காசிய நாடுகளையும் சார்ந்த புவி அரசியல், கலாசார வகைப்பாடுகள் என்று பொருள். மேலும் அமெரிக்காவின் சில பகுதிகளில் இந்த ஓரியண்ட் என்ற சொல்லாடல் தவிர்க்கப்படுகிறது. அதற்குப் பதிலாகக் கீழைநாடுகள், ஆசியா என்றே குறிக்கப்படுகின்றது. கிழக்கின் பண்பாட்டை, அதன் தொன்மை நுட்பங்களை, வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பல ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் கவனித்திருக்கிறார்கள். மான்டெஸ்க், வில்லியம் பெக்போர்ட், தாமஸ் மூர், ஜான் வாட்டிங், ரால்ப் எமர்சன், தாமஸ் டி குவின்சி, விக்டர் ஹியூகோ, ரிச்சர்ட் பிரான்சிஸ் பர்டன் போன்றோர் இந்த வகைப்பாட்டிற்குள் வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் மாண்டெஸ்கின் ஓரியண்ட் சமூகம் குறித்த (The Persian Letters) முக்கியமான படைப்பாகும். அதில் மாண்டெஸ்க் பாரசீகம் குறித்தும் மத்திய ஆசியா குறித்தும் விரிவாக ஆராய்கிறார். இதில் அரசுகளுக்கிடையேயான உரையாடல் கடித வடிவில் இடம்பெறுகிறது. மேலும் மார்க்ஸ் தன் கடைசிக் கட்டத்தில் கீழைச் சமூகங்களைக் குறித்துத்தான் படிக்க இருப்பதாகக் குறிப்பிட்டார். அதாவது கீழை மதங்களான இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியன குறித்து தான் அதிகம் படிக்க ஆர்வமாக இருப்பதாக ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டார். இதன் மூலம் வரலாற்றில் மேற்கும் கிழக்கும் அவற்றின் மறுபிரதியாக்கத்தில் இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவற்றின் போதலாகவே இருந்திருக்கிறது.

கீழைச் (ஓரியண்டலிச) சிந்தனையாளர்கள் குறித்த இத்தொகுப்பின் ஆக்கம், என் பொருளாதாரப் புலம்பெயர் வாழ்க்கையின் ஆறு ஆண்டுகால உழைப் பின் வெளிப்பாடு. ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய இலக்கியச் சமூகத்தின் இயல்பான சூழலை விட்டு வாழ்வாதாரத் தேவைகளுக்காக வளைகுடா நாடு ஒன்றின் வேலைக்காகச் சென்றேன். அப்போது வெறுமையும், தவிப்பும், அந்நியத்தன்மையான மனமும் நிரம்பியவனாக மாறினேன். வாசிப்பு அனுபவமும், தேடலும், எழுத்தும் எனக்குள் ஏற்கனவே ஆழமாகப் பதிந்திருந்தன. வளைகுடா வாழ்க்கை இதைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கான தளமாகத் தொடக்கத்தில் இருக்கவில்லை. மேற்கத்திய நாடுகளில் குடிபெயர்ந்து தமிழில் எழுதிக் கொண்டிருப்பவர்கள் போல் வளைகுடாவில் இருந்துகொண்டு எழுதுபவர்கள் மிகக்குறைவு. காரணம் அந்த வாழ்க்கை ஏற்படுத்தும் வெறுமையும், எழுத்திற்கான உளவியல் சுதந்திரமும், சிந்தனைச் சுதந்திரமும் பறிக்கப்பட்ட நிலைதான். நான் இதனோடு அதிகமும் போராட வேண்டியிருந்தது.




"மேற்குதான் அறிவை வழங்க பிறந்தது; கிழக்கு அதை வாங்கப் பிறந்தது" என்கிற மேட்டிமைவாசிகளின் பொதுபுத்தியை தகர்த்தவர்கள் எட்வர்ட் செய்த், தாரிக் அலி, இஹாப் ஹசன் போன்ற கீழ்திசை அறிவுஜீவிகள். இவர்களது சுயமான விரிவாக்க சிந்தனை வெளிப்பாடு ஐரோப்பியர்களை அதிர வைத்தது. மேலும் இக்பால் அஹ்மத், ஹிசாம் சரபி, சமீர் அமீன் போன்றவர்கள் தங்களது மாற்றுச் சிந்தனைகளால் அதுவரை இதுதான் உண்மை என்று நிறுவப்பட்டிருந்த கருத்தியல்களை கொட்டிக் கவிழ்த்தார்கள்.

அடிப்படைவாதம், எண்ணெய் அரசியல், அரபுகள், சியோனிசம், யூதக்குருமார்களும், நாஜிகளும் யூத மக்களுக்கு எதிராக இரகசியமாக கைகோர்த்த பயங்கரம் போன்ற பல உண்மைகளை இந்நூல் எடுத்துரைக்கிறது. கீழைச் சிந்தனையாளர்களின் பத்துபேரின் வாழ்க்கை குறிப்பு அவர்களின் பணிகள் ஆகியவற்றை சுருக்கமாக இந்நூல் அறிமுகம் செய்கிறது. தமிழ்ச் சிந்தனைப் பரப்பில் இந்நூல் புது வரவு மட்டுமல்ல புதிய வெளிச்சத்தைப் பாய்ச்ச வந்திருக்கும் நூலும் கூட...

இந்நூலை ஆக்கிய சர்பிமுஹம்மது தற்போது வளைகுடாவில் தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றி வருகின்றார். இவர் மத்திய கிழக்குச் சமூகம், அரசியல், கலாசாரம், அரபு இலக்கியம், கீழைக்கோட்பாடுகள், பின்காலனியம், பின்நவீனத்துவம் போன்ற துறைகளில் ஆர்வம் மிக்கவர். இவை தொடர்பான பல் வேறு கட்டுரைகளை இணையத்தளங்களிலும் தமிழ் சிற்றிதழ்களிலும் தொடர்ந்து எழுதி வருபவர். இதன் வளர்ச்சிக் கட்டமாகவே இந்நூல் வெளிவருகின்றது.

| | | |
|---|---|---|
| நூல் | : | கீழைச் சிந்தனையாளர்கள் ஓர் அறிமுகம் |
| நூலாசிரியர் | : | சர்பிமுஹம்மது |
| பக்கம் | : | 240 |
| விலை | : | 837.50 |
| வெளியீடு | : | அடையாளம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.சந்திரசேகரன்

# கல்வி ஆய்வியல்




கல்வியியல் ஆய்வில் ஈடுபடும் சகல மாணவர்களும் முதலில் செய்ய வேண்டிய பணி ஆய்வுக்கான பிரச்சினையைத் தெரிவு செய்வதல்ல. ஆய்வியல் முறைகள் பற்றிய நிறைவான விளக்கமின்றி ஆய்வுத்துறையில் நுழைவதில் எதுவித பயனுமில்லை. இதற்காகவே இன்று சகல பல்கலைக்கழகங்களும் "ஆய்வு முறைகள்" என்ற தலைப்பில் ஒரு கற்கை நெறியையே நடாத்துகின்றன. இவ்வாறான விரிவுரைத் தொடரில் ஈடுபாடு காட்டுவதோடு நில்லாது ஆர்வமுள்ள மாணவர் இவ்விடயம் பற்றி விரிவாகக் கற்க ஆங்கிலத்தில் ஏராளமான நூல்களும் கட்டுரைகளும் இருக்கின்றன. ஆனால் தமிழில் இத்துறையில் நூல்களின் பற்றாக்குறை காணப்படுவதை விசேடமாகச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. இப்பற்றாக்குறையை நன்குணர்ந்த பேராசிரியர் அவர்கள் கல்வியியல் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ள மாணவர்களுக்குப் பேருதவியொன்றைச் செய்யும் வகையில் இவ்வாறான நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இன்று மேற்படிப்புப் படிக்கும் கல்வியியல் மாணவர்கள் மட்டுமன்றி பாடசாலை ஆசிரியர்களும் நாம் வகுப்பறையில் எதிர்நோக்கும் கற்றல் - கற்பித்தல் பிரச்சினைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தாமே கண்டறியும் வகையில் அவர்களே ஆய்வாளர்களாக மாற வேண்டிய புதிய நிலை உருவாகியுள்ளது. அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அனைத்துக்கும் சர்வதேச கல்வியியல் ஆய்வுத் தளத்திலிருந்து தீர்வுகளைத் தெரிவு செய்து கொள்ள முடியாது. அத்தீர்வுகளைச் சர்வதேச ரீதியாகப் பொதுமைப்படுத்த முடியாத நிலையில் ஆசிரியர்களே ஆய்வாளராக மாறவேண்டியுள்ளது. அவர்கள் செய்யவேண்டிய ஆய்வுகள், செயல்நிலை ஆய்வுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பேராசிரியர் அவர்களின் இந்நூல் அவர்களுக்கும் சிறந்த ஆய்வு வழிகாட்டியாக விளங்கும் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது.

இப்பின்புலத்தில் கல்வியியல் ஆய்வு முறைகள் பற்றிய பேராசிரியரின் இந்நூல் பெறும் முக்கியத்துவம் தெளிவுறப் புலனாகும். கல்வியியல் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறை அதிகாரிகள் உள்ளடங்கிய கல்வி உலகு இந்நூலுக்கு உரிய ஆதரவையும் வரவேற்பையும் வழங்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

**கல்வி ஆய்வியல்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | க.சின்னத்தம்பி |
| பக்கம் | : | 138 |
| விலை | : | 360.00 |
| வெளியீடு | : | சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபா.ஜெயராசா

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்


# சமூக வானொலி :
## மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்

தொடர்பாடலியலில் சமூகவானொலிகள் தனித்துவமான வகிபாகத்தைக் கொண்டுள்ளன. அவற்றின் இயக்கு பரிமாணங்களை ஆழ்ந்து நோக்கும் போது முன்னோடி நூலாகவும் முதல் நூலாகவும் எம்.சீ. ரஸ்மின் எழுதிய இந்த ஆக்கம் அமைந்துள்ளது. காலத்தின் தேவை கருதி இது, தொடர்பாடல் அறிகையில் தடம் பதிக்கின்றது.

ஒலிப்படிமங்களை உருவாக்கி, சமுதாய நோக்கிலே இடைவினை கொள்ளவைக்கும் கலைத்துவம் தழுவிய தொடர்பாடல் ஆக்கமொன்றே சமுதாய வானொலியினால் மேற்கொள்ளப்படுகின்றது. அந்நிலையில், அது மரபுவழி வானொலியிலிருந்து பெரியளவில் வேறுபடுகின்றது. நேயர்களை வினைப்படா கவர்ச்சியாளராக மாற்றமுறச்செய்யாது, செயலூக்கம் எழும் இயக்கமுள்ளவர்களாக மாற்றியமைக்கும் செயற்பாட்டினை நூலாசிரியர் பொருத்தமான மொழிப்பாங்கிலே விளக்கியுள்ளார்.

சமூகவானொலியோடு இணைந்த தொழில்நுட்ப மேம்பாடும் அதன்வழியாக மேற்கொள்ளப்படும் சமுதாய பங்குபற்றலின் வழியான வலுவூட்டலும் மக்கள் மயப்பாட்டை சமூக நுண்மதி வயப்படுத்துகின்றன. சமூக நுண்மதியை ஒடுக்குமுறை விடுவிப்புக்கும் ஆக்கமுறை உத்தலுக்கும் பயன்படுத்தும் தன நிலைகள் நூலிலே விளக்கப்படுகின்றன.

ஆய்வு நூலாகவும் பயன்கொள் நூலாகவும் சமூக வானொலி - மனித வலுவாக்கத்திற்கான ஊடகம் என்னும் இந்நூலின் தொடர்ச்சி படிமலர்ச்சி கொள்ளப்படுகின்றது. சமூக வானொலியின் செயற்பாடு மக்கள் பங்குபற்றலை ஒரு படிமலர்ச்சி செயற்பாடாக அல்லது பரிணாம வளர்ச்சி கொண்ட கட்டமைப்பும் செயல்முறையாக அமைத்தல் நடப்பியலை நோக்கிய நகர்வாகக் காணப்படுகின்றது. சமுதாயத்தின் சிந்தனைக் கோலங்களை மேலும் வளமான அறிகைத் தளங்களுக்கு இட்டுச்செல்லும் செயற்பாட்டில் வானொலியின் பிரயோக நிலைபற்றிய புலக்காட்சியை கட்டமைப்படைய வைக்கும் முயற்சியாக இந்நூலாக்கம் மேலெழுகின்றது.




| சமூக வானொலி | |
|---|---|
| நூலாசிரியர் | : எம்.சீ.ரஸ்மின் |
| பக்கம் | : 208 |
| விலை | : 500.00 |
| வெளியீடு | : சேமமடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பார்வை

க.மு.அ.அஹ்மது ஜீவர்

# நவீனகால அரபி உரைநடை இலக்கியம்

ஹிலாகுகான் பக்தாது எப்போது அழிக்கப்பட்டதோ, அதாவது கி.பி 1258ஆம் ஆண்டு முதல் இலக்கிய வளர்ச்சியும், எழுச்சியும் அரபி இலக்கியத்தில் தடைப்பட்டன. இலக்கியப் படைப்புகள் உயர் குலத்தோர் மற்றும் ஆட்சியாளர்களைப் புகழும் வண்ணம் அமைந்ததாலும், ஆட்சி புரிபவர்கள் துர்க்கியர்கள் என்பதாலும் அரபி இலக்கிய வளர்ச்சி குன்றத் தொடங்கியது. ஆட்சிமொழி துர்க்கியாக இருந்தது. துர்க்கியர்கள் குறைந்த இலக்கியச் சுவையுடையவர்களாயிருந்ததால், படைப்பாளிகளின் படைப்புகளும் குறையத் தொடங்கின. அரபு உலகம் துர்க்கியர்களின் ஆட்சியின் கீழ் 1516 முதல் 1800 வரை இருந்தது. அத்துடன் அரபி இலக்கியத்தின் "சோக காலம்" 1800-இல் முடிவுக்கு வந்தது.

எல்லாக் கலாசாரங்களும் சீரழிந்து அரபிமொழி ஆட்சிமொழி என்ற அந்தஸ்திலிருந்து இறங்கி துருக்கி மொழி ஆட்சி மொழியானதால் அரபி மொழியும், இலக்கியமும் சிதைந்தன. இவ்வாறு சிதைந்த அரபி இலக்கியம் தரத்தில் மட்டுமல்லாது எண்ணிக்கையிலும் குறைந்தது. அனால் இது ஒரு செயற்கை நிகழ்வே, தற்காலிக அழிவேயாகும்.

நவீனகால அரபி இலக்கியம் என்பது பத்தொன்பதாவது நூற்றாண்டு முதல் உருவான இலக்கியப் படைப்புகளையே குறிக்கும். நவீனகால அரபி இலக்கிய வரலாறு கி.பி.1798ஆம் ஆண்டு எகிப்தை நெப்போலியன் கைப்பற்றியதிலிருந்து தொடங்குகிறது. இக்கால கட்டத்திற்கு முற்பட்ட பகுதியை, அதாவது 15,16,17 ஆகிய நூற்றாண்டுகளை இலக்கியத்தின் "அழிவுக்காலம்" என வரலாற்றாசிரியர்கள் அழைக்கின்றனர்.

வரலாற்று ஆசிரியர்களும், இலக்கிய ஆர்வலர்களும் எகிப்திலும், இதர அரபு நாடுகளிலும் அமைந்த மூன்று நூற்றாண்டுகளைக் கொண்ட துருக்கிய ஆட்சியில் இலக்கிய வளங்கள் குன்றிய, புதிய இலக்கிய வடிவங்களுமற்ற அரபி இலக்கியத்தையே கண்டார்கள். ஆனால் 19வது நூற்றாண்டில் "அந்நஹ்தா" என்ற இயக்கம் லெபனான், சிரியா, எகிப்து போன்ற பகுதிகளில் கிளர்ந்து, வளர்ந்து இதர அரபு நாடுகளுக்கும் பரவியது. "அந்நஹ்தா" என்றால் மறுமலர்ச்சி அல்லது புத்துணர்ச்சி என்று பொருள். சிலரோ "மறுபிறப்பு" என்றும் கூறுவர்.

மேற்கின் தாக்கம் இவ்வரபி இலக்கியத்தில் நெப்போலியன் காலத்தில் உள்ளே நுழைந்தது என்பதை அனைவரும் உணர்வர். ஐரோப்பிய, அமெரிக்கப் பிரச்சார இயக்கங்கள் மேற்கத்திய சிந்தனைகள் பரவ ஒரு முக்கிய பொறுப்பு வகித்தன. ஆட்சியாளர் முஹம்மது அலி பாஷா மேற்கத்திய சிந்தனைகள் "நவீனமயம்" என்ற பெயரில் எகிப்தில் நுழைந்தன. மேற்கத்திய தொழில்நுட்பங்களையும், புது இலக்கியப் பாணிகளையும் முஹம்மது அலி ஆதரித்தார். மேலும் எகிப்திய இளைஞர்களை ஐரோப்பாவிற்கு அனுப்பி அவற்றைக் கற்கச் செய்தார். ஆக ஐரோப்பியக் கலாசாரங்கள், கலைகள், அறிவியல், தொழில்நுட்பங்கள் சிரியா, எகிப்து, லெபனான் ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. மொழிகள், மொழிபெயர்ப்புப் படைப்புகள், கலாசாரப் பரிவர்த்தனை ஆகியவை ஐரோப்பிய, அரேபிய கண்டங்களுக்கிடையே ஒரு பிணைப்பை உறுதி செய்தன.

இதன் பின்னரே மேற்கத்திய இலக்கிய வடிவங்கள் அரபி இலக்கியத்தில் நுழைந்தன. மேலும் அரபிகளின் மனிதவள மேம்பாட்டிற்காக கீழ்த்திசை அறிஞர்களும், வல்லுநர்களும் சிறந்த பணியாற்றினர். கீழ்த்திசை அறிஞர்கள் அரபிகளின் கல்வித்தாகத்திற்கு ஒரு தடாகமாக விளங்கினர். மேலும் தற்கால மதச் சார்பற்ற கல்வி முறையால் "அல்அஸ்ஹர்" போன்ற சரித்திர புகழ்பெற்ற பழமைவாய்ந்த கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களின் சிறப்பு குறைந்தது. புதிதாகத் தொடங்கப்பட்ட அச்சகங்களின் வளர்ச்சி, இதழியல் துறையின் வாயிலாக வெளியான மேற்கத்திய இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் மற்றும் அவற்றின் தழுவல்களைக் கொண்ட இலக்கியப் படைப்புகள், மேற்கத்திய அரசியல் சிந்தனைகள், தேசியவாத கொள்கைகள் ஆகியவை நவீனகால அரபி இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டன. இதன் விளைவு பழைய அரபி இலக்கிய வடிவங்கள், இக்கால மேற்கத்திய வடிவங்களைப் படிப்படியாகத் தழுவத் தொடங்கின. 18ஆம் நூற்றாண்டிலும், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உள்ள வேறுபாட்டைக் கவனித்தாலே அம்மாற்றம் நமக்குக் கண்கூடாகப் புலப்படும்.

அரபு உலகம் அறியாத இலக்கிய வடிவங்களான நவீனகால நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள் முதலானவை வெளியிடப்பட்டன. இவை அனைத்தும் மேற்கத்தியத் தாக்கத்தால் தோன்றின.

மேற்கத்திய நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பாலும், தீவிர அரசியல் சமூக மாற்றங்களாலும், அறிவியல் வளர்ச்சியாலும் நவீனகால அரபி இலக்கியம் வளர்ச்சி தோன்றியது. மேற்கத்திய தொழில் நுட்பம் அரபு உலகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு விஞ்ஞான வளர்ச்சிகள் கலாசார பரிவர்த்தனைகள் ஆரம்பமாயின.

19-வது நூற்றாண்டில் "பெய்ரூத்" பதிப்புத் துறையில் ஒரு சிறந்த மையமாக விளங்கியது. அதை தொடர்ந்து கெய்ரோவில் "பூலாக்" அச்சகமும் தடம்பதித்தது. கல்வித்துறையில் பெண் கல்வியும் வளர்ச்சி கண்டது. அச்சுத்துறை, இலக்கிய வளர்ச்சியில் ஒரு சிறந்த கருவியாக விளங்கியது. மேற்கு நாடுகளோடு ஏற்பட்ட தொடர்பு, கெய்ரோவிலும், பெய்ரூத்திலும் கலாசாரத் தாக்கத்தை உருவாக்கியது. நெப்போலியன் எகிப்தை வெறும் படையோடு சென்று அடையாமல் இரண்டு அச்சகங்களையும், பல அறிஞர்களையும் எகிப்துக்கு சென்றடையுமாறு செய்தார். அரசாங்க ஆணைகளை இந்த அச்சகங்கள் அச்சிட்டன. முதன்மையாக பிரெஞ்சு மொழி உபயோகப்படுத்தப்பட்டாலும் அரபி மொழிப் பெயர்ப்புகளும் அச்சிடப்பட்டன. பிரெஞ்சுக்காரர்கள் முதன்முறையாக எகிப்தியர்களுக்கு "கூரியர் டி லீ எகிப்த்" என்ற ஐந்து நாட்களுக்கொருமுறை வெளிவரும் செய்தித்தாளை 29 ஆகஸ்டு 1798-லிருந்து அச்சிட்டு வெளியிட்டனர். அவர்களின் அரசு இதழாகவும், அத்தோடு கெய்ரோ நகரச் செய்திகளும் அவ்விதழில் இடம்பெற்றன.

எகிப்தை ஆண்ட அல்பேனிய கவர்னர் முகம்மது அலிபாஷா (1805-1848), இலக்கிய ஆர்வலராய் விளங்கியது ஒரு சிறந்த முன்னுதாரணம். தனது கல்விக் கொள்கையால் எகிப்தியர்களை ஐரோப்பிய யூனிவர்சிட்டிக்கு உயர்கல்விக்காக அனுப்பியதால் அரபி இலக்கியத்தில் மேற்கத்திய தாக்கம் தொடங்கியது. முகம்மது அலி வலிமையான இராணுவ கல்லூரியை உருவாக்கினார். மருத்துவக் கல்லூரிகளை உயிர்ப்பித்தார். வெளிநாடுகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இராணுவக் கல்லூரியில் பணியமர்த்தப்பட்டனர். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலியில் எகிப்தியர்கள் தங்கிப் படித்தனர். இவ்வாறு அனுப்பப்பட்டு கல்வி கற்று உயரதிகாரிகளாக நியமிக்கப்பட்ட நாற்பத்தி நான்கு அதிகாரிகளில் ஒருவரான "ரிஃபாஅத் தஹ்தாவி" (1801-73), அரபி இலக்கிய மறுமலர்ச்சிக்கு ஒரு முக்கியகர்த்தாவாக விளங்கினார். 1826 முதல் 1831 வரை பாரிஸில் தங்கிப்படித்த "தஹ்தாவி", பிரெஞ்சு மொழியில் உள்ள கருத்துக்களை அரபிமொழியில் மொழிபெயர்க்கும் தகுதி படைத்தவராக உயர்ந்தார். எகிப்தில் 1836இல் மொழிகளுக்கான புலத்திற்கு இயக்குநராக நியமிக்கப்பட்டார். இதன் மூலம் மொழிபெயர்ப்புப் படைப்புகளை ஊக்கப்படுத்தியதோடு மட்டுமல்லாது, புவியியல், வரலாறு, தத்துவம், கணிதவியல், பொறியியல் சார்ந்த பல படைப்புகளை தானே அரபிமொழியில் மொழிபெயர்த்து சாதனை நாயகனாக விளங்கினார். ஆக 27 படைப்புகளை சுயமாகவும், மொழிபெயர்த்தும் வெளியிட்டவர் "தஹ்தாவி."

1828இல், முதல் "அரபி அரசுச் செய்தித்தாளான "அல்வகாயிஉ அல்மிஸ்ரிய்யா"வை தொடங்கி, அதன் செய்தி ஆசிரியராக தஹ்தாவி செயல்பட்டார். அரசிதழை நவீன கட்டுரைகள், இலக்கியங்கள் நிறைந்த சுவை மிகுந்த செய்தித்தாளாக மாற்றினார் தஹ்தாவி. ஆக தஹ்தாவி பொதுவாக அரபி மறுமலர்ச்சியின் முன்னோடியாகவும், குறிப்பாக "மொழி பெயர்ப்பு"த் துறையின் காரணகர்த்தாவாக மட்டுமன்றி, அரபி இதழியலின் முன்னோடியாகவும் செயல்பட்டார். தான் இறப்பதற்கு, ஒரு வருடம் முன்பு பெண்களுக்கான பள்ளிக்கூடங்களையும் திறந்தார். தஹ்தாவியின் அரவணைப்பில் பட்டைத் தீட்டப்பட்ட அவரது மாணாக்கர்கள், 2000க்கும் மேற்பட்ட பிறமொழிப் புத்தகங்களை அரபி மொழிக்கு மொழிபெயர்த்துச் சாதனைப் படைத்தனர்.

19வது நூற்றாண்டின் முதல் பாதியில் கலாசார மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த ஆட்சியாளர் முஹம்மது அலியின் பணி, அறிவியல் சார்ந்ததாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் விளங்கியது. அறிவுசார் நூல்களின் மொழிபெயர்ப்புகள், படைப்பிலக்கியங்களோடு தோளோடு தோளாகச் சென்றன.

சிரியா, லெபனானில் இக்காலக் கட்டத்தில், இலக்கிய மறுமலர்ச்சி துளிர்விடத் தொடங்கியது. ரோமானிய கத்தோலிக்க, மரோனிய (Moronites), ஆர்மீனியன் கிறிஸ்தவர்களின் பங்கும் குறிப்பிடத் தக்கதாக விளங்கியது. மரோனிய மதகுருவான ஜப்ரீல் பின் ஃபர்ஹாத் (1670-1732) சிரியா மற்றும் லெபனான் நாடுகளில் தோன்றிய அரபி இலக்கிய விழிப்புணர்ச்சிக்கு, வித்திட்ட முன்னோடிகளுள் ஒருவராவார். அவர் எழுதிய இலக்கண நூல் பல முறை 1836 மற்றும் 1891 ஆண்டுகளுக்கிடையே அச்சிடப் பட்டது.

லெபனானைச் சேர்ந்த அம்பரூஸ் அல்-மார்பிரை (1748-1811), 18வது நூற்றாண்டின் தலை சிறந்த இலக்கிய மேதை என்று நாம் கூறலாம். லெபனானில் பல ஆண்டுகள் நீதிபதியாய் பணியாற்றிய இவர், இஸ்லாமிய மார்க்க சட்ட திட்டங்களில் சிறந்த விற்பன்னராகவும் விளங்கினார்.

அரபு இலக்கிய மறுமலர்ச்சியை தோற்றுவித்த இரண்டு கிறித்துவ இலக்கியவாதிகளாக நிக்குலா யூசுஃப் அல்-துர்க் (1873-1828) மற்றும் புத்ரூஸ் இப்ராஹீம் கராமா (1774-1861) ஆகியோர் விளங்கி னார்கள்.

பத்தொன்பதாவது நூற்றாண்டு நான்கு சிறந்த எழுத்தாளர்களை ஈன்றது. அவர்கள்

(1) நாஸிஃப் அல் -யாஜிஜி (1800-71)

(2) அஹ்மது ஃபாரிஸ் அல்-ஷித்யாக் (1805-87)

(3) மாரூண் நக்காஷ் (1817-55)

(4) புத்ரூஸ் அல்-புஸ்தானி (1819-83)

இவர்களால் லெபனான் வளம் கண்டது. நவீன கால அரபி இலக்கியம் வாழ்ந்தது.

துருக்கியர்களின் ஆட்சி ஈராக்கில் நிலவிய போதிலும், அங்கும் இலக்கிய மறுமலர்ச்சி மலரத் தொடங்கியது. மித்ஹாத் பாஷா (1869-1873)வின் ஆட்சிக் காலத்தில் ஈராக்கின் அரசிதழாக, செய்தித் தாளாக "அல்-ஜவ்ரா" நிறுவப்பட்டு வெளியானது. துர்க்கி, அரபி மொழிகள் இவ்விதழில் இடம்பிடித்தன. நவீனகால அரபி உரைநடை இலக்கியத்தில்,

(1) நாவல் இலக்கியம்

(2) சிறுகதை இலக்கியம்

(3) நாடக இலக்கியம்


(4) சிறுவர் இலக்கியம்

(5) சீர்திருத்தவாதிகள் மற்றும் சிந்தனைவாதிகள் உரைநடை இலக்கியப் பங்களிப்பு

(6) கட்டுரை இலக்கியம்

(7) இலக்கிய வரலாறு, விமரிசனம், அரசியல் இலக்கியம், இதழியல் மற்றும் பேச்சுக்கலை.

முதலிய வடிவங்களில் உள்ள உரைநடை இலக் கியப் பங்களிப்பை நாம் பின்வரும் பக்கங்களில் காணலாம்.



நவீனகால அரபி இலக்கியம் பற்றியும் அதன் படைப்பு கள் பற்றியும் இதுவரை தமிழில் எந்த மொழிபெயர்ப்பும் இலக்கிய வரலாறும் வெளிவரவில்லை. இந்நிலையில் "நவீனகால அரபி உரைநடை இலக்கியம்" வெளிவருகின் றது. இலக்கியத்தில் இரண்டு கூறுகளான கவிதையும் உரைநடையும் தமிழ்ச் சிந்தனையை அடைய வேண்டும். இதன் மூலம் தமிழில் புத்தாக்கமான சிந்தனையும் படைப் பாக்கத் திறனும் வெளிப்பட வேண்டும். இந்நூல் தமிழில் புதுவரவு.

நூல் : நவீனகால அரபி உரைநடை இலக்கியம்
நூலாசிரியர் : க.மு.அ.அஹ்மது ஜுபைர்
பக்கம் : 165
விலை : 300.00
வெளியீடு : என்.சி.பி.எச்.

# முதுசொம்

16ஆம் நூற்றாண்டிலேயே அச்சில் வெளிவந்த முதல் இந்தியமொழி தமிழ் ஆகும். இருந்தபோதிலும் 19ம் நூற்றாண்டில் தான் அச்சயந்திரம் எனும் தொழிற்நுட்பம் தமிழ்ச்சமூகத்தில் பரவத் தொடங்கின. ஏடுகளில் தூங்கிய புத்தகங்கள் அச்சுவாகனம் ஏறின. புத்தகப் பண்பாடு, புத்தக உருவாக்கம் புது வேகத்தில் நடைபெறத் தொடங்கின. குறிப்பிட்ட இனத்தின் புலமைச் செயல் அனைவரது கவனிப்புக்கும் உரித்தானது. இவ்வாறு எழுச்சிபெற்று வந்த புத்தக உருவாக்கம் சார்ந்த பின்புலங்களை நாம் கற்றுக்கொள்வதற்கு பழைய நூல்களது பதிப்புச் செயற்பாடுகள் மீது எமது கவனத்தைக் குவிக்க வேண்டும்.

இந்த முதுசொம்களை புலமைச் செயல்களை அடையாளம் காட்டும் வகையிலேயே இந்தப் பகுதி அமைகின்றது.



நூல் : தொல்காப்பியம்- சொல்லதிகாரம்

உரை: நச்சினார்க்கினியார்

பரிசோதித்து பதிப்பித்தவர்:
சி.வை.தாமோதரம்பிள்ளை



நூல் : சிவதத்துவவிவேகம்

மொழிபெயர்ப்பு: சிவதத்துவவிவேகம்

பதிப்பித்தவர்: யாழ்ப்பாணத்து நல்லூர்
சதாசிவப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் : கந்தபுராணம்

அருளியவர்: கச்சியப்ப சிவாச்சாரியசுவாமிகள்

பரிசோதித்தவர்: ஆறுமுகநாவலர்

அச்சிட்டவர்: சதாசிவப்பிள்ளை



நூல் : ஞானவந்தாதியும், நான்மணிமாலையும்

அருளியவர்: ஸ்ரீ குமாரசுவாமி முனிவர்

வேண்டுகோள்: ஸ்ரீமத் ஆறுமுக தேசிகசுவாமிகள்

பரிசோதித்து வெளியிட்டவர்: யாழ்ப்புலோலியம்பதி ம.தில்லைநாதபிள்ளை



நூல் : கந்தபுராண நவநீதம்

ஆசிரியர்: யாழ்ப்பாணத்து மல்லாகம் சி.செந்திநாதையர்



நூல் : தொல்காப்பியம் - பொருளதிகாரம்

பதிப்பாசிரியர்: சி.வை.தாமோதரம்பிள்ளை

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

ஓலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# வ/ஓமந்தை மத்திய கல்லூரி
## V/OMANTHAI CENTRAL COLLEGE

1911 - 2011

100

Anniversary

சேமமடு பொத்தகசாலை, சேமமடு பதிப்பகம், பத்மம் பதிப்பகம்
நூற்றாண்டு விழா காணும் ஓமந்தை மத்திய கல்லூரிக்கு
வாழ்த்து தெரிவித்து மகிழ்கின்றது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




CHEMAMADU BOOK CENTRE

சேமமடு

UG.50 People's Park, Colombo -11
Tel:011-2472362, 2331475 Fax: 011-2448624.
chemamadu@yahoo.com, pathmaseelan@chemamadu.com
Website: www.chemamadu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org